www.samarasam.net

# சமரசம்

மாதம் இருமுறை இதழ் 16-31 மே 2025 ₹25



இறை அழைப்பை ஏற்ற
இனிய அழைப்பாளர்
மௌலானா அப்துல் ஹஃபீஸ் ரஹ்மானி

வக்ஃப் திருத்தச் சட்டம்:
இனி நாம்
செய்ய வேண்டியது என்ன?

# கல்வி அன்றும் இன்றும்




மக்தப் மதரஸாவின் வளர்ச்சி; மார்க்கத்தின் எழுச்சி

மருத்துவம் சார்ந்த 20 B.Sc. பட்டப் படிப்புகள்

கல்வியைத் திணிக்காதீர்கள்

நலிவுறும் கல்வி



# ADMISSION NOTICE

# THASSIM BEEVI ABDUL KADER
## COLLEGE FOR WOMEN

A Minority Institution Sponsored by Seethakathi Trust, Chennai
Recognized by DBT under Star College Scheme, Ministry of Science and Technology, Govt. of India.
An Autonomous Institution Affiliated to Alagappa University, Karaikudi.
Accredited by NAAC with "A" Grade [CGPA:3.16] & ISO 9001:2015 Certified Institution.
Recognized by UGC under 2(f) & 12 (B). Kilakarai – 623517, Ramanathapuram District
**Phone :** 04567 - 241934 / 241933 **E-mail :** principal@thassim.ac.in



Dr. B.S.Abdur Rahman
Founder

## UG PROGRAMMES (3 Years-Regular)

Part-I Language options for four semesters
Tamil, Arabic & Hindi

### ARTS, COMMERCE & MANAGEMENT

B A Arabic
B A English
B Com
B Com with Computer Applications
B Com Professional Accounting
B B A

### LIFE SCIENCE, FOOD SCIENCE, COMPUTATIONAL SCIENCE AND SOCIAL SCIENCE

B Sc Nutrition and Dietetics
B Sc Costume Design and Fashion
B Sc Information Technology
B Sc Computer Science
B Sc IT with Cyber Security
B C A
B Sc Artificial Intelligence & Data Science
B Sc Mathematics
B Sc Chemistry
B Sc Microbiology
B Sc Biotechnology
B Sc Psychology

## PG PROGRAMMES (2 Years-Regular)

M A English
M Com
M Sc Nutrition and Dietetics
M Sc Costume Design and Fashion
M Sc Information Technology
M C A (2 Years) AICTE Approved
M Sc Mathematics
M Sc Chemistry
M Sc Microbiology
M Sc Psychology

## RESEARCH PROGRAMMES

**Ph D (Full Time)**

Ph D in Commerce
Ph D in Computer Science
Ph D in Home Science
Ph D in Chemistry

**Diploma in Apparel Designing (1 Year) Eligibility +2**
**Collaborative Diploma & Advance Diploma**
**Special Education Programmes**
One Year Programme
UG Degree / UG Degree with B.Ed can apply

- Diploma in Child Development and Sensory Processing
- Diploma in Differentiated instruction for Diverse Learners in the Regular Stream
- Advanced Diploma in Inclusive Practices
- Advanced Diploma in Child and Adolescent Play Therapy
- Advanced Diploma in Inclusive Pedagogy
- Advanced Diploma in Therapeutic Recreation and Rehabilitation

Monthly Stipend for meritorious Research Scholars

Research Collaboration with Industries / Universities

Diploma in Muballiga for All Muslim Students in collaboration with UNIS Academy

Full time Muallama and Muballiga for Hostel Muslim students

Well-furnished Hostel, Free Wifi, Nutritious Food, Fitness Centre, Indoor & Outdoor Games Facilities

Well Equipped Central Library and E-Library

College Bus Facilities

Japanese Language Learning Centre

### CONCESSION ON TUITION FEE FOR SPORTS PLAYERS

| Participation in International | Participation in National | Participation in State Level | Winner in District Level |
|---|---|---|---|
| 100% | 75% | 50% | 25% |

Recognised by State and Central Government Sports Development Authority

Rs.1000/- concession for the pre-Registration seats from 20th April 2025 to 5th May 2025.

### CONCESSION ON TUITION FEE FOR MERITORIOUS STUDENTS

| PG PROGRAMME | Percentage in UG | 90% above | 85 - 89% | 80 - 84% | 75 - 79% |
|---|---|---|---|---|---|
| | Concession | 100% | 75% | 50% | 25% |

**CONCESSION ON TUITION FEE FOR ALUMNAE STUDENTS (25% for All PG Programmes)** **Free Hostel for PG & Ph.D Students**

**Rs.2000/- concession for the students from the sister institutions at the time of admission.**

**Alhaj Arif Buhary Rahman**, Chairman
**Alhaj Khalid A K Buhari**, Secretary
**Dr Rahmathunisa Abdur Rahman**, Correspondent
**Dr S Sumaya**, Principal

93424 54601, 93424 54632
94426 17038, 94426 17021

: admissionstbakc@thassim.ac.in

Admission through website :
**www.thassim.ac.in**



## உள்ளே...





**6** கல்வியைத் திணிக்காதீர்கள்!
- தலையங்கம்

**8** கல்வி: அன்றும் இன்றும்
- சேயன் இப்ராகிம்

**14** மக்தப் மதரஸாவின் வளர்ச்சி மார்க்கத்தின் எழுச்சி
- மௌலவி ஹஸீப் பாகவி

**18** மருத்துவம் சார்ந்த 20 B.Sc. பட்டப் படிப்புகள்
- Dr. அ.ப. ஃபரூக் அப்துல்லா

**22** இறை அழைப்பை ஏற்ற இனிய அழைப்பாளர் மௌலானா அப்துல் ஹஃபீஸ் ரஹ்மானி
- மௌலவி முஹம்மத் ஹனீஃபா மன்பயீ

**24** சேவைத் துறையை நோக்கி ITI கல்வி
- கல்வியாளர் வாஜித் ஷா

**30** கல்வியில் மொழியைத் திணிக்காதீர்!
- பேராசிரியர் ச.அய்யம்பிள்ளை

**34** நலிவுறும் கல்வி
- முஹம்மது யஹ்யா பாஷா

**38** வக்ஃப் திருத்தச் சட்டம்: இனி நாம் செய்ய வேண்டியது என்ன?
- வி.எஸ்.முஹம்மத் அமீன்

**44** இஸ்லாமிய வெறுப்புக் குற்றங்கள்
- K. ரியாஸ்

**48** கவிதை : தொப்பி, தாடி
- வி.எஸ்.முஹம்மத் அமீன்


*வாழ்க்கைப் பாடங்கள், அக்கரைப் பச்சை, சிறார் உலகம், உச்சி முதல் உள்ளங்கால் வரை தொடர்கள் அடுத்த இதழில் இடம்பெறும்*


ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*

**samarasam.article@gmail.com**

*சந்தா - விநியோகப் பிரிவு*
*விளம்பரத் தொடர்புக்கு :*

**M.அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*

**samarasam.advt@gmail.com**

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | : | ரூ.550 |
| அரையாண்டு | : | ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : | ரூ.3500 |

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

*கடிதங்கள், படைப்புகள்*
*அனுப்ப வேண்டிய முகவரி:*

பொறுப்பாசிரியர்,
சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
• 044-2662 0091
• samarasam.article@gmail.com
• www.samarasam.net

## உண்மை உரைப்போர் வெல்வர்

மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் 50 ஆவது ஆண்டு விழாவில் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தை இஸ்ரேலுக்குக் கொடுத்ததற்காக வானியா அகர்வால், இப்தி ஹால் அபூ ஸாத் ஆகியோர் தங்களை பதவியிலிருந்து விலக்கிவிடுவார்கள் என்று தெரிந்தும் உண்மைக்காகக் குரல் கொடுத்துள்ளார்கள். இருவரையும் உண்மை போற்றும் உலகத்தார் எல்லாம் பாராட்டு கிறார்கள். உண்மை உரைப்பவர்களுக்கு வாழ்வு உண்டு என்று குவைத் மைஃபதுரா நிறுவனத்தின் தலைமை அதிகாரி அப்துல்லா அல்டோபாஸ் இருவருக்கும் வேலை வாய்ப்பை வழங்கியுள்ளார். அவர்களுக்கு வாழ்த்துகள் என்றென்றும்.

– V.K. பீமராஜா, இராஜபாளையம்

## சொத்தை இழக்க முடியுமா?

நற்செயல்கள் தொடர்ந்து நடக்க வேண்டும். அவை உயிர்ப்புடன் திகழ்வதற்கே வக்ஃப். அதை முஸ்லிம்கள் உட்பட பலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்பது இன்றைய நிலை. முஸ்லிம்களின் சொத்துகளை நிர்வகிப்பதில் முஸ்லிம் அல்லாதவர்களை நியமிப்பது நடைமுறைக்கு ஏற்றதல்ல. ஊழல் நடக்கிறது என்பதற்காக சொத்தையே இழக்க முடியாது. இந்த உலகம் ஊழல் நிரம்பியது. உச்சநீதிமன்றத்தின் நியாயமான தீர்ப்பை எதிர் பார்ப்போம்.

– ப.பீர் இலாஹி, உத்தமபாளையம்

## நெஞ்சுரமிக்க குரல்

தன்மானமுள்ள எந்த ஒரு ஆளுநரும் உச்ச நீதிமன்றத்தின் இந்த சாட்டையடி தீர்ப்புக்குப் பின்னால் பதவியில் ஒட்டிக் கொண்டு இருக்க மாட்டார். RSS முகாம்களில் இருந்து வருபவர்களிடம் தன்மானத்தை எதிர்பார்க்க முடியாது.

அநியாயமாகக் கொல்லப்பட்ட ஃபலஸ்தீன மக்களுக்காக நேருக்கு நேர் நிறுவனத்தை நோக்கி அதன் ஊழியர்களான வானியா அகர்வால், இப்திஹால் அபூ ஸாத் இருவரும் ஓங்கி முழக்கமிட்ட நெஞ்சுறுதியை உலகம் முழுவதும் உள்ள நீதியை நாடும் நன்மக்கள் அனைவரும் வாழ்த்தி மகிழ்வார்கள். ஃபலஸ்தீன் நிச்சயமாக வெல்லும்!

- S. சபீர் அஹ்மத், ஆணைக்காரன் சத்திரம்




## எவ்வகை நியாயம் இது?

இந்துக் கோயில்களை இந்துக்கள் நிர்வகிக்க வேண்டும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், பள்ளிவாசல்களை முஸ்லிம்கள் மட்டுமே நிர்வகிக்க வேண்டும் என்கிற உரிமை பறிக்கப்படுவது எந்த வகையில் நியாயம்? பாஜக கொண்டு வந்த இந்த மசோதா முஸ்லிம்களின் உரிமைகளைப் பறிக்க நிறைவேற்றப்பட்டுள்ளது. வக்ஃப் குறித்த விரிவான செய்திகளைத் தரவுகளுடன் வழங்கிய சமரசத்திற்கும் சேயன் இப்ராகிமுக்கும் வாழ்த்துகள். எந்த நினைவு தினத்தை மறந்தாலும் உலக முடிவு தினத்தை அடுத்து வரும் மறுமை நாளை என்றும் எப்போதும் நினைவு கூர்வோம் என்ற அஷ்ஷெய்க் A.C அகார் முஹம்மது வின் வாழ்க்கைப் பாடம் அருமை.

- M. லைலாம்மா, S. மகுதனன், அஜிதா, S. சபானா ஃபாத்திமா, தேனி

## இந்து மதத்திற்கே எதிரானவர்கள் இவர்கள்

இந்து மதம் அனைத்து உயிரினங்கள் மீதும் மனிதர்கள் மீதும் அன்பு, இரக்கத்துடன் நடந்து கொள்ளத் தூண்டுகிறது. யோகி, அமித்ஷா போன்றவர்கள் சிறுபான்மை மக்களிடம் வெறுப்புடன் நடந்து கொள்கிறார்கள் மதவெறியுடன் அப்பாவி முஸ்லிம்கள் கிறித்தவர்களுக்குக் கொடுமை இழைக்கிறார்கள். போராடும் உரிமை இல்லை என்று அவர்களின் வீடுகளை இடிக்கிறார்கள். இஸ்லாமியர்கள் ஜெய்

ஸ்ரீ ராம் சொல்ல மறுத்தால் படுகொலை செய்கிறார்கள். இப்படி எல்லாம் பிற மதத்த வர்களிடம் நடக்கும்படி இந்து மதம் கூறு கிறதா? இல்லவே இல்லை. இந்துக்கள் வேறு RSS சித்தாந்தங்களைக் கடைப் பிடிக்கும் இவர்கள் வேறு.

– ப. சையத் அஹ்மத், துளசேந்திரபுரம்

## பாதிப்புக்குள்ளாகும் முஸ்லிம்கள்

ஆளுநரின் அடாவடித்தனத்திற்கு உச்ச நீதிமன்றத்தின் சிறப்பான தீர்ப்பு வரவேற்கத்தக்கது. வக்ஃப் திருத்தச் சட்டங் களை வாசிக்கும் போதும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துகளைக் கேட்கும் போதும் முஸ்லிம்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்றே தோன்றுகிறது. சாவா என்ற திரைப்படம் விஷக்கருத்தை விதைத்துள்ளது. நாங்கள் படிக்கும் காலத் திலும் ஔரங்கஜேப் கொடுமையாளராகவும் சில நல்லதும் செய்ததாக படித்த நினைவு.

– இரா. சண்முகவேல், கீழக்கலங்கல்

## அருமையான பெருநாள் முழக்கம்

அடிமைத் தனங்களிலிருந்து விடுதலை பெற்றவனே வாழத் தகுதி உடையவன் என மேடை பெருநாள் புரட்சி முழக்கம் கூறியது. ஒன்றிய அரசின் தூண்டுகோலால் மாநில ஆளுநர்கள் காய் நகர்த்துவதை நச்சென்று தலையங்கம் எடுத்துரைத் துள்ளது. மன்னர் முதல் மந்திரிகள் வரை மத, ஆட்சி வெறியர்கள் தொட்டு நாக்பூர் கலவரம் வரை பின்னணியை சேயன் இப்ராஹீம் விரிவாக விளக்கியுள்ளார். கடவுள், பூமி, கட்டளையென உணர்வுகளால் தூண்டப்பட்டு இஸ்லாமிய வெறுப்புக் குற்றங்களைத் தொடர்ந்து நிகழ்த்தி வருவது கவலை அளிக்கிறது. வக்ஃப் குறித்த நாடாளு மன்ற உரைத் தொகுப்பு சிறப்பு.

– ப. குருசாமி, தேனி

## ஐயத்தைப் போக்கும் சமரசம்

தலையங்கம் உண்மையை எடுத்துரைத் துள்ளது. ஆளுநரின் அத்துமீறலுக்கு உச்சநீதிமன்றம் சிறந்த தீர்ப்பை வழங்கி உள்ளது. சேயன் இப்ராஹீம் அவர்களின் வக்ஃப் திருத்தச் சட்டம் பற்றிய ஒரு தெளி வான விளக்கம் அனைவருக்கும் பயனுள்ள தகவல்.

ஔரங்கஜேப் பற்றிய வரலாறு திரிக்கப் பட்டுள்ளது. சாவா போன்ற வெறுப்புத் திரைப் படங்களின் மூலம் கலவரத்தை ஏற்படுத்தும் இந்த நேரத்தில் மக்களின் ஐயத்தைப் போக்க சமரசம் எடுக்கும் பணி சிறப்பானது. பொதுமக்களுக்கு வரலாற்றையும், அரசியல் நிலைப்பாடுகளையும் தெரிந்து கொள்ள மிகவும் உதவுகிறது. நாடாளுமன்றத்தில் ஒலித்த குரல் மிகத் தேவையான ஆவணம். சிறப்பான தொகுப்பு.

– சுஹைல் ஷிஹாப், குட்டி ஆதில்,
கடையநல்லூர்


## மணமகள் தேவை

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட 57 வயது முஸ்லிம் மணமகனுக்கு குழந்தை இல்லாத விதவை அல்லது விவாகரத்தான மணமகள் தேவை.

மணமகன் B.Com படித்துள்ளார். பிரிண்டிங் தொழில் மூலமாக மாத வருமானம் ரூ.50,000 ஈட்டுகின்றார். இவருடைய மனைவி இறந்து இரண்டு ஆண்டுகளாகிறது. 17 வயது மகன் பட்டப்படிப்பு படித்து வருகிறார்.

தொடர்புக்கு : 9443011354, 7868888516

# செய்யது அம்மாள் பொறியியல் கல்லூரி

**AUTONOMOUS**

**Accredited with 'A+' Grade by NAAC**

Counselling Code **5921**

Approved by AICTE, New Delhi and Affiliated to Anna University, Chennai | Recognized Under section 2 (f) and 12 B of the UGC Act 1956
NBA Accredited UG Courses : ECE, EEE & MECH | Anna University Approved Research Centres : EEE, CSE, MECH & ECE
Dr. E.M. Abdullah Campus, Ramanathapuram - 623 502, Tamil Nadu. | Ph: 04567 - 222 234, Mobile : 84893 04000, 87548 88877 | E-mail : office@syedengg.ac.in, saec@syedengg.ac.in | Web : www.syedengg.ac.in

**Admission 2025 - 2026 Open**

இராமநாதபுரம் மாவட்டத்தில்

## தன்னாட்சி அந்தஸ்து பெற்ற முதல் பொறியியல் கல்லூரி

### UG COURSES OFFERED

- B.E. - COMPUTER SCIENCE AND ENGINEERING
- B.E. - ELECTRONICS AND COMMUNICATION ENGINEERING
- B.E. - ELECTRICAL AND ELECTRONICS ENGINEERING
- B.E. - MECHANICAL ENGINEERING
- B.E. - CIVIL ENGINEERING
- B.E. - BIOMEDICAL ENGINEERING
- B.TECH. - ARTIFICIAL INTELLIGENCE AND DATA SCIENCE
- B.TECH. - COMPUTER SCIENCE AND BUSINESS SYSTEMS
- B.TECH. - INFORMATION TECHNOLOGY

### PG COURSES OFFERED

- M.E. - COMPUTER SCIENCE AND ENGINEERING
- M.E. - EMBEDDED SYSTEM TECHNOLOGIES
- M.E. - VLSI DESIGN
- M.E. - MANUFACTURING ENGINEERING
- MBA - (Marketing, Finance, Human Resource, Operations & Business Analytics)
- PH.D. - EEE, CSE, ECE & MECH.

OUR RECRUITERS

wipro Infosys Galaxy ZOHO tcs Kaar cognizant BUDDI AI KodNest blueoshan Kryptos LMES Academy Delphi - TVS Technologies Smartladders Marketing Solutions STAR MW Endurance IntelliPaat Just Connect SL Lumax Hyundai Polytech

**+2 வில் 500 மற்றும் 550 மதிப்பெண்களுக்கு மேல் பெறுபவர்களுக்கு கல்விக்கட்டணச் சலுகை**

**முஸ்லிம் மாணவ, மாணவிகளுக்கு கல்விக் கட்டணத்தில் சிறப்புச் சலுகை**

**Call for Admission : 99942 05270, 90479 51189, 98940 44944**

# செய்யது அம்மாள் செவிலியர் பள்ளி
(பெண்கள்)

SYED AMMAL SCHOOL OF NURSING RAMANATHAPURAM

Permitted by Govt. of Tamil Nadu | Recognized by Tamil Nadu Nurses and Midwives Council
Recognized by Indian Nursing Council
Dr. E.M. Abdullah Campus, Lanthai, Ramanathapuram - 623 502
Ph : 94873 04000 | E-mail : syedammalnursingschool@gmail.com

**Admission 2025 - 2026 Open**

*Diploma in*

## General Nursing & Midwifery (GNM)

3 Years Course

**+2 வில் எந்த பாட பிரிவு எடுத்திருந்தாலும் விண்ணப்பிக்கலாம்**

## கல்லூரியின் சிறப்பம்சங்கள்

- மிகச்சிறந்த கட்டமைப்புடன் கூடிய ஆய்வக வசதிகள்.
- தலைசிறந்த ஆசிரியர்களின் வழிகாட்டுதல்.
- மாணவிகளுக்கு மிக குறைந்த கட்டண வசதி.
- 70 ஆண்டு கால பாரம்பரியமிக்க செய்யது அம்மாள் அறக்கட்டளை மருத்துவமனையில் பயிற்சி வகுப்புகள்.
- தகுதி வாய்ந்த ( SC / ST ) மற்றும் சிறுபான்மை ( Minority ) மாணவிகளுக்கு அரசு உதவித்தொகை பெற்றுத்தரப்படும்.
- கல்லூரியிலேயே தங்கி பயில்வதற்கான பாதுகாப்புடன் கூடிய தங்கும் விடுதி.

For Details Contact Office

சரம் : 45
மலர் : 22

وَقُولُوا قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

ஹிஜ்ரி 1446 துல்கஃதா 17 - துல்ஹஜ் 3 ● 2025 மே 16-31

# கல்வியைத் திணிக்காதீர்கள்!

தேசிய கல்வி ஆராய்ச்சி பயிற்சி கவுன்சில்(NCERT), 2025-26 கல்வியாண்டிற்கான 7ஆம் வகுப்பு சமூக அறிவியல் பாடப்புத்தகத்தைத் திருத்தியமைத்து டெல்லி சுல்தான்கள், முகலாயர்கள் பற்றிய பாடங்களை நீக்கியுள்ளது. அதற்குப் பதிலாக மௌரியர்கள், சுங்கர்கள், சாதவாகனர்கள் போன்ற பண்டைய இந்திய வம்சாவழிகள், மத, கலாச்சார மரபுகள், புனிதத் தலங்கள் பற்றிய பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

பூமி எவ்வாறு புனிதமாகிறது என்ற புதிய பகுதி மத மரபுகள், புனித யாத்திரைத் தலங்களை ஆராய்கின்றன. 12 ஜோதிர்லிங்கத் தலங்கள், சார்தாம் யாத்திரை, சக்தி பீடம், நதிகளின் சங்கமம், மலைகள், காடுகள் குறித்து இடம் பெற்றுள்ளன. உ.பியின் பிரயாக்ராஜில் கடந்த ஆண்டு நடந்த மஹா கும்பமேளா குறித்தும், ஒன்றிய அரசின் மேக் இன் இந்தியா, பெண்களைக் காப்போம்; பெண் களுக்குக் கல்வி அளிப்போம் திட்டம், அடல் சுரங்கம் உள்ளிட்டவை குறித்தும் இடம் பெற்றுள்ளன.

NCERT மட்டுமல்லாமல் பல மாநில பாடத்திட்டங்களிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. மகாராஷ்டிராவில் முகலாய வரலாறு, மேற்கத்திய வரலாறு பற்றிய பாடங்கள் நீக்கப்பட்டு சிவாஜி மன்னரைச் சுற்றிய பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

ஒன்றிய அரசு புதிய தேசியக் கொள்கை அடிப்படையில் கல்வித் திட்டத்தைச் சிதைத்து வருகிறது. மாணவர்கள் மத்தியில் மத வேறுபாடு, வெறுப்பைத் தூண்டும் வகையில் பாடத்திட்டத் தில் மாற்றங்களை அவ்வப்போது மேற்கொண்டு வருகின்றது. இது ஒருபுறம் என்றால் மறுபுறம் நீட் தேர்வின் மூலம் எளிய மாணவர்களின் மருத்துவக் கல்விக் கனவைப் பறித்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் நீட் தேர்விற்கு விலக்குக்கேட்டு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டும் நடைமுறைப்படுத்தப்படாத சூழலில் நீட் தேர்வு மையங்களில் நடைபெறும் உளவியல் தாக்குதல்களையும் ஒருபுறம் தொடுத்துக் கொண்டிருக்கின்றனர். கடந்த 2024ஆம் ஆண்டு நடை பெற்ற நீட் நுழைவுத் தேர்வின்போது வினாத்தாள் கசிவு, ஆள்மாறாட்டம் உள்ளிட்ட முறை கேடுகள் நடைபெற்றன. நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி உச்ச நீதிமன்றத்தில் 40 வழக்குகள் தொடரப்பட்டன. ‘குறிப்பிட்ட சில தேர்வு மையங்களில் மட்டும் முறைகேடுகள் நடைபெற்று உள்ளன’ என்று தேசிய தேர்வு முகமை சார்பில் உச்ச நீதிமன்றத்தில் விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த முறைகேட்டைத் தடுக்க முடியாதவர்கள்தாம் தேர்வு எழுதும் மாணவ மாணவிகளின் தாலி, மூக்குத்தியைக் கழட்டச் செய்தல், மூக்கு காதுகளில் டார்ச் அடித்துப் பார்த்தல், ஆடைகளைச் சோதித்தல் என்ற உளவியல் தாக்குதல்களைத் தொடுக்கின்றனர். இந்த ஆண்டு நீட் தேர்வு மையங்களில் மாணவிகளின் ஆடையிலுள்ள பட்டன்களை அறுத்தெறிந்துள்ளனர்.

கல்வி என்ற பெயரில் மாணவர்களைப் பெரும் அச்சுறுத்தலுக்கு ஆளாக்கி வரும் சூழலில் கோடை விடுமுறைகள் கூட அவர்களுக்கு இல்லாத வகையில் 10, +2, வகுப்பு மாணவர்களுக்குப் பாடங்களை நடத்தத் தொடங்கி கல்விச்சுமையை அதிகப்படுத்தியுள்ளனர். பாடச்சுமையை அதிகரித்து படிப்பைத் திணிக்கும் சூழலில் ஒரு தலைமுறையே உளவியல் சிக்கலுக்கு ஆளாகும் வாய்ப்பு இருக்கின்றது.

பாடங்களைக் குறைத்தல், கற்றல் முறையை இனிதாக்குதல், அதிகத் தேர்வுத் திணிப்பு களிலிருந்து விடுவித்தல், மனப்பாட பாரத்தைக் குறைத்தல், நன் நம்பிக்கையும், உற்சாகமும் நிறைந்த மனித மாண்புகளைப் போற்றும் கல்வித்திட்டத்தை உருவாக்குதல் என்று கல்வித் திட்டத்தை மாற்றினால்தான் வளரும் தலைமுறையை மகிழ்வுள்ளவர்களாய், பயனுள்ளவர்களாய் மாற்ற முடியும்.

# கல்வி அன்றும் இன்றும்!

- சேயன் இப்ராகிம்

19ஆம் நூற்றாண்டில் நாட்டில் நிலவிய கல்வி முறைக்கும் இன்றைய 21ஆம் நூற்றாண்டு கல்வி முறைக்கும் மிகப் பெரிய வேறுபாடு இருக்கிறது. அப்போது ஆசிரியர்களைத் தேடிச் சென்றுதான் மாண வர்கள் கல்வி கற்றனர். குருமார்கள் என்று அப்போது அழைக்கப்பட்ட ஆசிரியர்கள் தங்களது இல்லங்களில் அல்லது தாங்கள் நிறுவியிருந்த குருகுலங்களில் இருந்தனர். மாணவர்கள் அங்கு சென்றே பயின்றனர். குருகுலக் கல்வி முறையில் மொழிப் பாடமும், இலக்கணமும் முக்கியமாகக் கற்பிக்கப் பட்டன. கணிதமும், தத்துவவியலும், வான சாஸ்திரமும் துணைப் பாடங்களாக இருந்தன. கணிதம், மக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படத்தக்க விதத்திலேயே கற்பிக்கப் பட்டன. அதாவது அடிப்படை அம்சங்களான கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகியன கற்பிக்கப்பட்டன.

சமூகத்தின் அனைத்துப் பிரிவு மாணவர் களுக்கும் கல்வி கற்கின்ற வாய்ப்பு அப்போது இல்லை. சமூகத்தில் மேல் தட்டில் இருந்த பிராமணர்களும், அதற்கு அடுத்த நிலையிலிருந்த சாதிப் பிரிவினருமே (தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் சைவப் பிள்ளை மார்கள், முதலியார்கள், செட்டியார்கள் ஆகியோர்) இந்த குருகுலங்களுக்குச் சென்று கல்வி கற்க முடிந்தது. பிற சாதிப் பிரிவு மக்களுக்குக் கல்வி தேவையில்லை என்ற பொதுக் கருத்தே அப்போது இருந்தது. அவர்கள் தங்களது குருகுலத் தொழில்களைச் செய்து கொண்டிருந்தனர். அதுவே போதும் என்ற மனநிலையில் இருந்தனர். பட்டியலின மக்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அவர்களில் கல்வி பயின்றோர் அறவே இல்லை என்று சொல்லி விடலாம்.

பெண்கள் கல்வியும் அப்போது இல்லை. கல்வி ஆண்களுக்கு மட்டுமே உரிய ஒன்று என்றும், பெண்கள் வீடுகளிலே இருந்து பிள்ளைகளைப் பெற்று வளர்த்துக் கொண்டு, சமையல் வேலைகளைக் கவனித்துக் கொண்டு வாழ்ந்து வந்தனர். உயர் சாதியி னரான பிராமணப் பெண்கள் கூட கல்வி கற்க வில்லை. அவர்கள் வேதங்களைப் படிப்பது கூட தடை செய்யப்பட்டிருந்தது.

பெரும்பாலான குருமார்கள் (ஆசிரி யர்கள்) பிராமணர்களாக இருந்ததால், குருகுலக் கல்வியில் சமஸ்கிருத மொழியும் முதன்மை மொழிப் பாடமாக மாணவர்களுக் குக் கற்றுக் கொடுக்கப்பட்டது.

1854ஆம் ஆண்டு மெக்காலே கல்வித் திட்டம் நடைமுறைக்கு வரும் வரை இந்தக் குருகுலக் கல்வி முறையே இருந்தது. ஆங்கிலேயே ஆட்சியாளர்களால் நியமிக் கப்பட்ட மெக்காலே இந்தியக் கல்வி முறையை முழுமையாக ஆராய்ந்து ஒரு புதிய கல்வித் திட்டத்தைப் பரிந்துரைத்தார். அவரது பரிந்துரைகளை ஏற்றுக் கொண்ட ஆங்கிலேய அரசு அதனை வேகமாக நடை முறைப்படுத்தியது. மெக்காலே பரிந்துரை களின்படி நாடெங்கும் நிறுவனக் கல்வி

நிலையங்கள் தொடங்கப்பட்டன. அவை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டன.

1. தொடக்கக் கல்வி - ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை
2. நடுநிலைக் கல்வி - ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை
3 உயர்நிலைக் கல்வி - ஒன்பதாம் வகுப்பு முதல் பதினொன்றாம் வகுப்பு வரை
4. கல்லூரிகள் - பட்டப்படிப்பு, பட்ட மேற் படிப்புகள்
5. பல்கலைக்கழகங்கள் - உயர் கல்வி நிறுவனங்களை நிர்வகிக்கின்ற, கண் காணிக்கின்ற நிறுவனங்கள்.

மேற்கூறப்பட்ட முதல் மூன்று நிலைக் கல்வியைக் கற்பிக்கின்ற நிறுவனங்கள் முறையே தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி என அழைக்கப்பட்டன. இவை தனித்தனியே இயங்கி வந்தன. இந்தப் புதிய கல்வித் திட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு, குருகுலங்கள் படிப்படியாக மூடப்பட்டன. மாணவர்கள் இந்த நிறுவனக் கல்வி நிலையங்களுக்குக் கல்வி கற்க வந்தனர். எழுபத்து ஐந்து விழுக்காட்டிற்கும் அதிக மான மாணவர்கள் தொடக்கக் கல்வியோடு தங்களது படிப்பு களை நிறுத்திக் கொண்டனர். நடுநிலை, உயர்நிலைப் பள்ளி களுக்குச் சென்றவர்கள் மிக மிகச் சொற்பம். அதுவும் பிராமண வீட்டு மாணவர்களுக்கே நடு நிலை, உயர்நிலைப் பள்ளிகளுக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. நிறுவனக் கல்வி முறை செயல் படத் தொடங்கிய பின்னரும், பெண்கள், பட்டிய லினத்தவர்கள், முஸ்லிம்கள் ஆகிய பிரிவுகளைச் சார்ந்த மாணவர்கள் அவற்றைப் பயன் படுத்திக் கொள்ளவில்லை. அவர்கள் தங்களது பெற்றோர் களுக்குத் துணையாக வீடு களிலேயே இருந்து குலத் தொழில்களைச் செய்து வந்தனர்.

அனைத்துப் பிரிவு கல்வி நிலையங்களும் அப்போது அரசின் முழுக் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தன. அரசாங்கம் நடத்திய பள்ளிக் கூடங்கள் தவிர, அரசு உதவி பெற்ற தனியார் பள்ளிகளும் செயல்பட்டு வந்தன. இப்போது இருப்பது போல் பாடப்புத்தகங்களை அரசு அச்சிட்டு வெளியிடவில்லை. நிர்ண யிக்கப்பட்ட பாடமுறையின்படி பள்ளிக் கூடங்களே நிபுணர்கள் எழுதிய பாடப்புத்த கங்களை வாங்கி மாணவர்களுக்கு வழங்கின. எட்டாவது வகுப்பிற்கு அப்போது பொதுத் தேர்வு இருந்தது. அதில் தேர்ச்சி பெற்ற வர்களே உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல முடியும். அடுத்த நிலையில் 11ஆவது வகுப் பில் பொதுத் தேர்வு நடத்தப்பட்டது. இதில் தேறியவர்களே கல்லூரிகளில் பட்டப் படிப்புக் குச் செல்ல முடியும். பொதுத் தேர்வுகள் எந்த விதமான முறைகேடுகளுமின்றி நடத்தப் பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

இப்போது அடிக்கடி பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் வரும் செய்திகள் போல



அப்போது வினாத்தாள் கசிவு என்ற பிரச்னை பெருமளவு இல்லை. பெரும்பாலான அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவி பெற்ற தனியார் பள்ளிகளிலும் தமிழே பயிற்றுமொழியாக இருந்தது. சில தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் ஆங்கிலம் பயிற்றுமொழியாக இருந்தது. தமிழ் பயிற்றுமொழியாக இருந்த பள்ளிக்கூடங்களில் தமிழ் ஒரு மொழிப் பாடமாகவும், ஆங்கிலம் இன்னொரு மொழிப் பாடமாகவும் இருந்தன. தமிழ் பயிற்றுமொழிப் பள்ளிகளில் ஆறாவது வகுப்பிலிருந்து ஆங்கில மொழிப் பாடம் கற்றுக் கொடுக்கப்பட்டது. மாணவர்கள் தங்களது தாய்மொழி - ஆங்கிலம் என இரு மொழிகளையே கற்றனர். இந்தி கட்டாய மில்லை.

அப்போது அரசுக் கல்லூரிகளும், அரசு உதவி பெற்ற தனியார் கல்லூரிகளும் இயங்கி வந்தன. இவற்றை நிர்வகித்து வந்த பல்கலைக்கழகங்கள் அரசின் முழுக் கட்டுப் பாட்டில் இயங்கி வந்தன.

தவறு செய்கின்ற, படிப்பில் கவனம் இல்லாத மாணவர்களை லேசாக அடிக்கலாம் என்ற விதி அப்போது இருந்தது (Corporal Punishment) இதனைப் பயன்படுத்திக் கொண்டு ஆசிரியர்கள் மாணவர்களை நன்றாகவே வெளுத்து வாங்கினர். பெற்றோர்களும் அதனைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. நீதி போதனை வகுப்புகள் வாரத்தில் ஒரு நாள், இருநாள் நடத்தப்பட்டன. இவை மாணவர்களை நெறிப்படுத்த உதவியது. சாதி, சமய மோதல்கள் பள்ளிகளில் அறவே இல்லை. ஆசிரியர்களுக்கு அப்போது ஊதியம் மிகவும் குறைவே. எனினும் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றினர். அன்றைய காலக் கட்டத்தில் கல்வித் துறை அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட ஆசிரியப் பெருமக்களையும் அவர்களுக்கு மரியாதை செலுத்துகின்ற மாணவர்களையும் கொண்டிருந்தது.

> **கல்வி ஆண்களுக்கு மட்டுமே உரிய ஒன்று என்றும், பெண்கள் வீடுகளிலே இருந்து பிள்ளைகளைப் பெற்று வளர்த்துக் கொண்டு, சமையல் வேலைகளைக் கவனித்துக் கொண்டு வாழ்ந்து வந்தனர்.**

### கல்வி இன்று

1970ஆம் ஆண்டு வரை தமிழகக் கல்வித் திட்டத்தில் பெருமளவு மாற்றங்கள் வரவில்லை. (இந்தியா முழுவதும் அதே நிலைதான்) ஆனால் அதற்குப் பிறகு பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. அவையாவன.

1. கல்வித் துறையில் மாநிலங்களுக்கு இருந்த பல அதிகாரங்கள் ஒன்றிய அரசுக்கு மாற்றப்பட்டன.

2. ஒன்றிய அரசு நாடெங்கும் மத்தியப் பள்ளிக்கூடங்களை நிறுவியது (+2 வரை)

3. இந்த மத்தியக் கல்விக் கூடங்களில் ஆங்கிலமே பயிற்று மொழியாகியது. இந்தி மொழி படிப்பது கட்டாயமாக்கப்பட்டது. இந்தப் பள்ளிகளில் தனிக் கல்வித்திட்டம் (Syllabus) செயல்படுத்தப்பட்டது.

4. 1980க்குப் பின்னர் நாடெங்கும் தனியார் மெட்ரிக் பள்ளிகள் புற்றீசல்கள் போல் முளைத்தன. இந்தப் பள்ளிகளிலும் ஆங்கிலமே பயிற்று மொழியாகியது. இந்தி அல்லது வேறு மொழிகள் கற்றுக் கொடுக்கப்பட்டன.

5. 1980க்குப் பின்னர் உயர் கல்வியிலும் தனியார்கள் நுழைந்தனர். கலைக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், மருத்துவம் சார்ந்த பிற படிப்புகளுக்கான கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் தொடங்க தனியார்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்தத் தனியார் கல்லூரிகளுக்கு அரசாங்கம் எந்த நிதி உதவியும் செய்ய வில்லை. எனவே இந்தக் கல்லூரிகள் மாணவர்களிடமிருந்து கட்டணங்களை

வசூலித்தே இவற்றை நிர்வகித்து வருகின்றன. இவற்றில் கல்விக் கட்டணமாக இலட்சக் கணக்கான ரூபாய் வசூலிக்கப்படுவதால், பணக்கார வீட்டுப் பிள்ளைகள் மட்டுமே இங்கு சேர்ந்து பயில முடிகிறது.

> **தமிழக பள்ளிக் கல்வித் துறை உயர் அதிகாரிகளின் சிந்தையில் தோன்றுகின்ற செயல் திட்டங்களை நிறைவேற்றுகின்ற களமாக தொடக்கப் பள்ளிக் கூடங்கள் மாற்றப்பட்டுள்ளன. இதனால் கல்வித்தரம் குறைந்து கொண்டே போகிறது.**

6. தனியார் பல்கலைக் கழகங்களும் உருவாகி விட்டன.

7. மருத்துவம் போன்ற உயர்கல்வி பயில நீட் போன்ற பல போட்டித் தேர்வுகள் வந்து விட்டன.

8. இன்றைக்கு நாட்டில் மத்தியப் பள்ளிகள், தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளிகள், அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகள் என நான்கு வகையான பிரிவுகள் பள்ளிக் கல்வியிலேயே செயல்பட்டு வருகின்றன.

9. கல்லூரிக் கல்வியும், பல்கலைக்கழக கல்வியும் இதே நிலையிலேயே இருந்து வருகிறது.

10. இந்தப் பல்வேறு வகையான பள்ளிகளில் பாடத்திட்டமும் மாறுபடுகிறது. எனவே அகில இந்திய அளவில் நடைபெறும் போட்டித் தேர்வுகளில் சம பலத்துடன் இந்த மாணவர்களால் போட்டியிட முடியவில்லை.

### *பாதகமான விளைவுகள்*

1. கல்வியில் தனியார்கள் நுழைந்த பிறகு அது முற்றிலும் வணிகமயமாகி விட்டது. மழலையர்கள் பள்ளிக் கூடங்களிலிருந்து பல்கலைக்கழகங்கள் வரை இந்த வணிகமயம் நீக்கமற நிறைந்திருக்கிறது. ஆங்கில மோகம் காரணமாகவும், ஆங்கிலம் மூலம் படித்தால்தான் உயர் கல்விக்குச் செல்ல முடியும் வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்ற எண்ணத்தில் செல்வந்தர்கள் வீட்டுப் பிள்ளைகளும், நடுத்தர அல்லது அதற்குச் சற்றுக் கீழ் நிலையில் உள்ளவர்களின் வீட்டுப் பிள்ளைகளும், தனியார் பள்ளிகளுக்குச் சென்று விட்ட நிலையில், இந்தப் பள்ளிகளுக்குச் செல்ல முடியாத, வசதி வாய்ப்பற்ற, குறைந்த வருமானம் கொண்ட மக்களுடைய பிள்ளைகளின் புகலிடமாக அரசுப் பள்ளிகள் மாறி விட்டன.

ஏதோ பொழுதுபோக்கிற்காக வருவது போல் இந்தப் பள்ளிகளுக்கு மாணவர்கள் வருவதால், படிப்பில் நாட்டமின்றி தேவையற்ற சாதி, சமய சச்சரவுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களைக் கட்டுப்படுத்த ஆசிரியர்களாலும் முடியவில்லை. அண்மைக் காலமாக உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கிடையே நடைபெறுகின்ற வன்முறைச் சம்பவங்களை இவற்றுக்கு உதாரணமாகக் கூறலாம்.

2. மாணவர்கள் தனியார் மெட்ரிக் பள்ளிகளை நாடிச் செல்கின்ற போக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற காரணத்தால், பெரும்பாலான அரசு தொடக்கப் பள்ளிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. அதிலும் கிராமப் புறங்களிலுள்ள அரசுத் தொடக்கப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாக இருக்கிறது. பல கிராமப்புற பள்ளிக்கூடங்களில் ஒன்று முதல் ஐந்தாவது வகுப்பு வரை ஒரு ஆசிரியர் மட்டுமே இருக்கிறார். பல தொடக்கப் பள்ளிகளில் மாணவர்கள் போதிய அளவு இல்லாத காரணத்தால், ஆசிரியர்களின் வேலை பறி போகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அந்த உபரி ஆசிரியர்களை வேறு பள்ளிகளுக்கு இடமாறுதல் செய்ய வேண்டியதிருக்கிறது. புதிய ஆசிரியர்களையும் நியமனம் செய்ய முடியவில்லை.

3. மதிப்பெண்களே மாணவர்களின் உயர் கல்வியைத் தீர்மானிக்கும் முக்கியக் காரணியாக இருப்பதால் அவர்கள்

பாடங்களை மனப்பாடம் செய்யும்படி நிர்பந்தப்படுத்தப்படுகின்றனர். மாணவ - மாணவிகளின் தேர்ச்சியை வைத்தே பள்ளிக்கூடங்களின் தரம் நிர்ணயிக்கப்படுவதால் பள்ளி நிர்வாகிகள் இதற்கு மிகுந்த முன்னுரிமை கொடுக்கின்றனர். விளையாட்டு போன்ற பிற கல்வி சார்பற்ற விஷயங்களில் அவர்கள் கவனம் செலுத்த முடியவில்லை. அதிக மதிப்பெண்கள் பெறுவதற்காக மாணவர்கள் பயிற்சி மையங்களிலும் சேர்கின்றனர். இங்கு 24 x 7 படிப்புத்தான். கட்டணமும் அதிகம். இதனால் பல மாணவர்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர்.

4. இருபால் கல்வி பெருகி விட்ட நிலையில் பள்ளிக்கூடங்களில் பாலியல் வன்செயல்களும் அதிகரித்து விட்டன. இது பற்றிய செய்தி வராத நாளே இல்லை. தங்களிடம் கல்வி பயில்கின்ற மாணவிகளிடம் பாலியல் சீண்டல்களில் ஈடுபட்டதாக இதுவரை தமிழ்நாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தப் போக்கு கல்வி முறைக்கு பெருமை சேர்க்கவில்லை. மாறாக இழிவையே கொண்டு சேர்க்கிறது.

5. கல்வி வணிகமயமாகி விட்ட நிலையில், அது ஊழல் மயமாகவும் மாறி விட்டது. பல்கலைக்கழகங்களே ஊழல்களின் ஊற்றுக் கண்களாகத் திகழ்கின்றன. பல பல்கலைக் கழகத் துணை வேந்தர்களே ஊழல் குற்றச் சாட்டுகளுக்கு உள்ளாகி விசாரணையை சந்தித்து வருகின்றனர்.

6. பொதுத் தேர்வுகளில், வினாத்தாள் கசிவு, ஆள்மாறாட்டம், முடிவுகளை அறிவிப்பதில் குளறுபடி என புகார்கள் வந்த வண்ணமிருக்கின்றன. கடந்த ஆண்டு நீட் தேர்வில் நடைபெற்ற குளறுபடிகள் இதற்குத் தக்க சான்றாகும்.

7. தொடக்கப் பள்ளி மாணவர்களின் கல்வித் தரம் வருந்தத்தக்க நிலையில் இருக்கிறது. ஐந்தாவது வகுப்புப் படிக்கின்ற மாணவர்களால் தமிழில் பிழையின்றிப் படிக்க, எழுத முடியவில்லை. Dictation இப்போது அறவே இல்லை. இதனால் மாணவர்களின் மொழித்திறன் பாதிப்பிற்குள்ளாகி இருக்கிறது. ஆசிரியர்கள் நேரமில்லாமல், பிற தேவையற்ற கல்வி முறைகளில் ஈடுபடுமாறு அவர்களைப் பள்ளிக் கல்வித்துறை நிர்ப்பந்தித்து வருகிறது. தமிழக பள்ளிக் கல்வித் துறை உயர் அதிகாரிகளின் சிந்தையில் தோன்றுகின்ற செயல் திட்டங்களை நிறைவேற்றுகின்ற களமாக தொடக்கப் பள்ளிக் கூடங்கள் மாற்றப்பட்டுள்ளன. இதனால் கல்வித்தரம் குறைந்து கொண்டே போகிறது. ஏதோ சில அலங்காரமான செயல் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் பள்ளிக் கல்வியில் சாதனைகள் நிகழ்த்தியதாகக் கல்வி அமைச்சரும் நினைக்கிறார்.

8. ஆங்கிலக் கல்வி மோகம் காரணமாக தங்களது பிள்ளைகளை மெட்ரிகுலேசன் பள்ளிகளில் சேர்த்த பெற்றோர்கள் ஐந்தாவது வகுப்பு வரை பார்த்து விட்டுப் பின்னர் தங்கள் பிள்ளைகளால் அங்கே தொடர்ந்து படிக்க இயலாது என்பதை அறிந்து 6ஆவது வகுப்பில் அரசுப் பள்ளிகளிலோ அல்லது அரசு உதவி பெறும் பள்ளிகளிலோ சேர்க்கின்றனர். அத்தகைய குழந்தைகள் தமிழும் தெரியாமல் ஆங்கிலமும் தெரியாமல் திண்டாடுகின்றனர். ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான கல்வி அரசு வசமே இருக்க வேண்டும். தனியார் மெட்ரிக் பள்ளிகள் ஆறாவது வகுப்பிலிருந்து தான் தொடக்க வேண்டும் என்ற நிலை வர வேண்டும்.

சுருங்கக் கூறின் இன்றைய கல்வி முறை பல குறைபாடுகளைக் கொண்டுள்ள கல்வியாகவே இருக்கிறது. அன்றைய கல்வி முறை பணக்காரர்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் சமமான கல்வியை வழங்கியது. இன்றைய கல்விமுறை பாரபட்சமானது. இதனை மாற்ற கல்வியாளர்கள், பெற்றோர்கள், அரசு என அனைத்துத் தரப்பினரும் சிந்தித்துத் தீர்வு காண வேண்டும்.


Unity Kids School
No. 11, Murrays Gate Rd, Alwarpet, Chennai, Tamil Nadu 600018
UNITY
PRACTISE
LEARN
SUCCEED
OUR VISION
To groom children who will be Academically Intelligent, Morally Sound, Emotionally Strong, Physically Vibrant and God-Fearing.
ADMISSION OPEN
ACADEMIC YEAR 2025-26
PRE-K G to CLASS 5
LIMITED SEATS HURRY!
SCAN CODE FOR ONLINE APPLICATION
OUR FEATURES
Academic Excellence
Well-Qualified Teachers
Values-Based Holistic Curriculum
Sports & Leadership Development
Fun & Safe Learning Environment
OUR FACILITIES
Interactive Classrooms
Multi-Media Support
Learning Labs
CONTACT US
Tel : (044) 2811 2433
Email: unitypublic@unityschool.in
www.unitypublicschool.com
No. 11, Murrays Gate Rd, Alwarpet, Chennai, Tamil Nadu 600018

# மக்தப் மதரஸாவின் வளர்ச்சி மார்க்கத்தின் எழுச்சி

*இந்திய நாட்டில் கடந்த நூற்றி ஐம்பது ஆண்டுகளாக மஸ்ஜித்கள் தோறும் காலை மாலை குர்ஆன் மதரஸாக்கள் நடைபெற்று வருகின்றன. அவை மக்தப் மதரஸா என்று அழைக்கப்படுகின்றன. மக்தப் மதரஸா என்றால் ஆரம்பப் பாடசாலை என்று பொருள். நமது இளவல்களுக்கு மார்க்கத்தின் அடிப்படைக் கொள்கைகள், கட்டாயக் கடமைகள், பெரும் பாவங்கள், உபரியான நற்செயல்கள் ஆகியவற்றைக் குறித்த முதன்மை அறிமுகத்தை வழங்குவது தான் மக்தப் மதரஸாவின் பிரதான நோக்கமாகும்.*

## பொதுக் கல்வியும் சமயக் கல்வியும்

ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன் குருகுலக்கல்வி, ஓராசிரியர் முறை நடைமுறையில் இருந்தது. பொருளாதாரத் தேவைகளுக்கு ஏதேனும் தொழில் ஒன்றைத் தெரிந்து கொள்வதும் குடும்ப வணிகத்தைத் தொடர்வதும் அன்றைய வழமையாக இருந்தது.

இன்றும் தொடரும் பிரிட்டிஷார் அறிமுகப்படுத்திய கல்வி முறை அப்போது மக்களிடையே பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. கல்வி நிறுவனமயமாக்கப்பட்டது. ஓர் ஆசிரியர் முறை அகற்றப்பட்டு பல ஆசிரியர்கள் பயிற்றுவிக்கும் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் உருவாக்கப்பட்டன. ஒரு ஆசிரியர் பல மாணவர்களை உருவாக்கிய நடைமுறை மாறி பல ஆசிரியர்கள் சேர்ந்து மாணவர்களை உருவாக்கின்ற நிறுவன முறை மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிரபலமான ஆசிரியர்களைத் தேடிச் சென்று கல்வி பயிலும் முறை அகன்று பள்ளிக்கூடங்கள் அல்லது நிறுவனங்களின் பெயர் பிரபலமானது.

ஆங்கிலேயர் உருவாக்கிய கல்விமுறை தொழிற்கல்வியை வழங்கியது. ஆங்கிலம் பிரதான மொழியாக இருந்தது. ஆகவே வேலைவாய்ப்பைப் பெறும் பொருட்டு மக்கள்



– மௌலவி ஹஸீப் பாகவி
ஃபாஜில் தேவ்பந்த்
மாநில செயற்குழு உறுப்பினர்,
ராபித்ததுல் உலமா சபை

பொதுக் கல்வியை நோக்கிச் சென்றார்கள். பொதுக் கல்வி, சமயக் கல்வி என்ற பாகுபாடு அப்போது உருவானது. இந்தத் தருணத்தில் தான் அகில இந்திய அளவில் அறிஞர்கள் இஸ்லாமிய அடிப்படைக் கல்வியை இளைய தலைமுறைக்குக் கொண்டு செல்லும் வகையில் காலை மாலை மதரஸாக்களை மஸ்ஜிதுகளில் உருவாக்கினார்கள். இன்று வரை இஸ்லாமிய மறுமலர்ச்சியை உருவாக்குவதில் மக்தப் மதரஸாக்களின் பங்களிப்பு மிகப் பெரியது.

### மக்தப் மதரஸாக்கள் ஏன் வேண்டும்?

ஒருவர் ஐந்து ஆண்டுகள் மருத்துவம் கற்றறிந்த பின்னர் அதில் நிபுணத்துவம் பெறுகின்றார். மருத்துவர் என்று அழைக்கப் படுகின்றார். ஏதேனும் ஒன்றைக் கற்றறிந்த பின்னர் தான் அதில் நிபுணத்துவம் அடைய முடியும். அப்படியென்றால் வாழ்நாள் முழுவதும் ஒருவர் முஸ்லிமாக வாழ்வதற்கு இஸ்லாம் குறித்த கற்றல் அவசியமாகிறது. ஆனால் இஸ்லாத்தை கல்வியாக அறி கின்ற பருவத்தைக் கட்டாயமாகக் கடக்கின்ற ஒரு சூழல் சமூகத்தில் இருக்கின்றதா என்ற கேள்வி எழுகிறது. அதற்கான ஓர் ஏற்பாடு அவசியம் வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்கின்ற பொழுது அதற்கான பதிலாக வந்து நிற்பது தான் மக்தப் மதரஸாக்கள். ஒருவர் பத்து வயதிலிருந்து பதினான்கு வயது வரை ஐந்து ஆண்டுகள் தினசரி ஒரு மணி நேரம் அல்லது அதைவிடக் குறைவாக மார்க்கத்தைக் கற்றுக்கொண்டால் தன் வாழ்நாள் முழுவதும் பின்பற்றுகின்ற அளவிலான இஸ்லாத்தைத் தெரிந்து கொள்ள முடியும் என்ற சிறப்பான ஏற்பாடு உண்மையில் உன்னதமானதாகும்.

10 வயது முதல் 14 வரை உள்ள ஐந்து ஆண்டுகள் மிக முக்கியமானவை. குழந்தைப் பருவத்தில் இருந்து பெரியவர்களாக மாறு கின்ற தருணம். இந்தக் காலகட்டத்தில் பெரியவர்களான பின் எப்படி வாழ வேண்டும், எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது, இறையச்சம், மறுமைச் சிந்தனை, இறைத்தூதர்(ஸல்) அவர்களைப் பின்பற்றுதல் உள்ளிட்ட அடிப்படையான, வாழ்க்கைக் கலை சார்ந்த விஷயங்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். எதையும் கற்றுத் தராமல் எதுவும் கற்றறியாமல் வளர் கின்ற இளைய தலைமுறை குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் சுமையாக மாறிவிடுவார்கள். ஆகவே நாளைய இளைய தலைமுறை அதாவது நமது குழந்தைகள் சிறப்பாக வார்த் தெடுக்கப்பட, நல்லவர்களாக உருவாகிட, மார்க்கத்தின் அடிப்படை அம்சங்களை அறிந்து கொள்ள, மக்தப் மதரஸாவிற்கு சிறுவர்கள் வருவதை உறுதி செய்வது பெற்றோர்களின் கடமையாகும்.

பல் சமய மக்களோடு கலந்து வாழ்கின்ற இந்தியா போன்ற நாடுகளில் இஸ்லாத்தைக் குறித்த அடிப்படைப் புரிதல் உள்ளவர்களால் மட்டும் தான் இஸ்லாம் தொடர்பான உரை யாடலை மற்ற மக்களிடம் முன் வைக்க முடியும். அழைப்புப் பணி என்பது ஏதோ மேடைப் பேச்சோடு நின்று போகின்ற ஒன்று அல்ல. சக மனிதர்களோடு உரையாடுதல், வெவ்வேறு விஷயங்களைக் குறித்துப் பேசுகின்ற பொழுது இஸ்லாமியப் பார்வையை முன் வைத்தல்.

இஸ்லாம் தொடர்பான புரிதலைச் சிறு வயதில் ஏற்படுத்துவது மக்தப் மதரஸாக்கள் தான். உரிய வயதில் மார்க்கச் செய்திகளை உள் வாங்கிய சிறுவர்கள் பின்னாளில் சிறந்த அழைப் பாளர்களாக உருவாகும் வாய்ப்பு உள்ளது.

ஜும்ஆ உரைகள், மார்க்கம் தொடர்பான வேறு பிற சொற்பொழிவுகள், இஸ்லாமிய நூல்கள் அனைத்தையும் புரிந்து கொள்வதற்கு இஸ்லாமிய கலைச் சொற்கள், அடிப்படைச் செய்திகளைச் சிறு வயதில் அறிந்திருப்பது அவசியம். மக்தப் மதரஸா அதற்கான சிறந்த வாய்ப்பு என்றால் அது மிகையல்ல. சிறு வயதில் மக்தப் மதரஸாவில் இஸ்லாத்தின் அடிப்படை விஷயங்களை அறிந்த ஒருவரால் இஸ்லாம் குறித்த எந்த சொற்பொழிவு களையும், நூல்களையும் உள்வாங்கிக் கொள்ள முடியும். வாசிப்பதும் கேட்பதும் அருகிப்போன இந்தக் காலகட்டத்தில் மக்தப் மதரஸாக்களும் இல்லாமல் போய்விட்டால் இளைய தலைமுறையின் இஸ்லாமிய எழுச்சி எப்படிச் சாத்தியமாகும்?

## மக்தப் மதரஸாக்களின் வீழ்ச்சி ஏன்?

இஸ்லாமிய அடிப்படைக் கல்வியை முஸ்லிம் சமுதாயம் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. ஒரு குழந்தையின் எதிர் காலம் என்பது மரணத்திற்கு முந்தைய காலம் மட்டுமல்ல! மரணத்திற்குப் பிந்தைய மறுமை வாழ்க்கையும் எதிர்காலம் தான் என்பதைப் புரிந்து கொள்ளாத அறியாமை இன்றும் முஸ்லிம்களிடம் தொடர்கிறது. ஆகவே தான் தன்னுடைய குழந்தையின் முப்பதாவது வயதில் 40ஆவது வயதில் சுபிட்சமாக இருக்க வேண்டும் என்று நினைக்கும் பெற்றோர் மரணத்திற்குப் பிறகு சுவனம் சென்று சுபிட்சமாக இருக்க வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளவில்லை. இவர்களைக் குறித்துத் தான் திருக்குர்ஆன் மறுமையை விற்று உலகத்தை விலைக்கு வாங்கிக் கொண்டவர்கள் என்று சாடுகிறது.

உலகக் கல்வியின் முக்கியத் துவத்தை மிகத் தாமதமாகப் புரிந்து கொண்ட முஸ்லிம் சமுதாயம் அதற்குப் பலியாக இஸ்லாமிய அடிப்படைக் கல்வியை ஆக்கி இருப்பது வேதனையின் உச்சகட்டமாகும். மக்தப் மதரஸாவின் அனைத்து வகையான வீழ்ச்சிக்கும் முழுக் காரணமாக இருப்பது பள்ளிக்கூட கல்விக்கு அதீத முக்கியத்துவத்தையும் தேவைக்கும் அதிகமான நேரத்தை வழங்குவதும் தான். 10 மணி நேரம் பள்ளிக்கூடம், அதற்குப் பிறகு நான்கு மணி நேரம் டியூஷன் என்ற அடிப்படையில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்குக் கூடுதல் மதிப்பெண்களைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தை அடைய முயல்வதைப் போல் மதரஸா கல்விக்கும் நாம் முக்கியத்துவம் வழங்குவதில்லை.

அதுமட்டுமில்லாமல் ஆங்காங்கே தெருவுக்குத் தெரு குர்ஆன் வகுப்புகள் நடைபெறுவதும் மிக முக்கியமான காரணமாகும். ஒவ்வொரு மஹல்லாவிலும் நம்முடைய குழந்தைகள் பள்ளிவாசலுக்குச் சென்று அங்கே நடைபெறும் மக்தப் மதரஸாவில் பயில்வதை உறுதி செய்ய வேண்டும். பள்ளி வாசல்களில் வகுப்புகள் நடைபெறுவதற்குத் தடையாக இருக்கின்ற எந்தக் காரணத்தையும் மஹல்லா நிர்வாகம் கண்டு கொள்ளாமல் விட்டு விடக்கூடாது.

அது மட்டுமில்லாமல் குர்ஆனை அரபியில் ஓதக் கற்றுக் கொள்வதைப் பெருமையாகப் பார்க்கப்படும் அதே நேரத்தில் இஸ்லாத்தை அறிவது பின்னுக்குத் தள்ளப் படுகின்றது. ஒருவர் தனக்குத் தேவையான இஸ்லாமிய அறிவைக் கற்றுக் கொள்வதும் குர்ஆனை அரபியில் மட்டும் ஓதக் கற்றுக் கொள்வதற்கும் மிகப்பெரிய வேறுபாடு உண்டு. ஆகவே தான் இன்றைக்கு இணையத்தில் தஜ்வீது வகுப்புகள் மிகப்பெரிய செல்வாக்குப் பெற்று வருகின்றன. முஸ்லிம்கள் நடத்தும் பல பள்ளிக்கூடங்கள் இந்த ஒன்றை மட்டுமே வைத்துக்கொண்டு முஸ்லிம் குழந்தைகளை இஸ்லாத்தில் வார்த்தெடுப்பதாகக் கூறிக் கொண்டு இலட்சக்கணக்கில் கட்டணங்கள் பெறும் கல்வி நிறுவனங்களாக மாறி வருகின்றன. அத்தகைய பள்ளிக்கூடங்களில் நடைபெறும் ஆண்டு விழாக்களில் தொடக்கம் என்னவோ திருக்குர்ஆன் வசனங்களாக இருந்தாலும் ஆடலும் பாடலும் கொண்ட சாதாரண திருவிழா நிகழ்ச்சிகளாக நடைபெறுவதைப் பார்க்க முடிகின்றது.

> எதுவும் கற்றறியாமல் வளர்கின்ற இளைய தலைமுறை குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் சுமையாக மாறி விடுவார்கள்.

மக்தப் மதரஸாக்களின் தடைகளை உரிய முறையில் களைந்து சீர் செய்யாவிட்டால், பொருளாதாரத்திலும் நவீன தொழில்நுட் பத்திலும் மிளிர்கின்ற அடுத்த தலைமுறை உருவாகும். ஆனால் மறுமையில் வெற்றி பெற்று சுவனம் செல்லும் முஸ்லிம்களாக அவர்கள் இருக்க மாட்டார்கள்.


ezyCampus Simplified.
Revolutionzing SCHOOL Governance
Empowering schools to Excel in the Digital Age
STANDOUT FEATURES
ezyCampus Simplified. Transform Your Campus with Smarter Management
ACADEMIC MANAGEMENT
(STUDENT ADMISSION, ATTENDANCE, EXAMINATION)
FINANCIAL TOOLS
(FREE COLLECTION,PAYROLL, EXPENSE MANAGEMENT)
ADMINISTRATIVE FEATURES
(STAFF MANAGEMENT, INVENTORY,TRANSPORT)
COMMUNICATION TOOLS
(PARENT COMMUNICATION, NOTIFICATIONS)
TECHNICAL BENEFITS
(SECURE & SCALABLE, REGULAR UPDATES, INTEGRATION)
Join the future of educational management. Discover how EzyCampus can revolutionize your school today !
Empowerment
Connectivity
Simplicity
EZYCAMPUS
CAMPUS MANAGMENT SOFTWARE
SOFTWARE DEVELOPMENT
CUSTOM APP DEVELOPMENT
E-ACADEMY
DIGITAL MARKETING-B2B,B2C,CT
E-COMMERCE
SEEMATTISTORES.COM
ZIAS
ZIAS INNOVATIVE TECHNOLOGIES PRIVATE LIMITED - INDIA.
https://ziastech.in/ info@ziastech.in +91 93453 87413

# மருத்துவம் சார்ந்த
# 20 B.Sc. பட்டப் படிப்புகள்

**மருத்துவத்துறை சார்ந்த உயர் கல்வி தகவல் கட்டுரை**

- Dr. **அ.ப. ஃபரூக் அப்துல்லா,**
**பொது நல மருத்துவர், சிவகங்கை**



***12ஆம் வகுப்பு தேர்வு எழுதி விட்டு தேர்வு முடிவுகளுக்காகக் காத்திருப்பவரா நீங்கள்? 12ஆம் வகுப்பில் பயாலஜி, உயிரியல் துறையைத் தேர்ந்தெடுத்து மருத்துவம் சார்ந்த படிப்புகளைத் தேர்ந்தெடுக்கும் ஆர்வம் இருப்பவரா நீங்கள்? நீட் தேர்வு எழுதாமல் 12ஆம் வகுப்பு மதிப்பெண்களைக் கொண்டே படிக்கத் தகுந்த மருத்துவம் சார்ந்த B.Sc. படிப்புகள் குறித்து அறிய ஆர்வம் இருப்பவர்களா நீங்கள்? உங்களுக்கானது இக்கட்டுரை.***

### அனைத்துப் படிப்புகளுக்கும் பொதுவான விசயங்கள்

1. அனைத்து மருத்துவம் சார்ந்த B.Sc. படிப்புகளும் நான்கு ஆண்டு படிப்புகள் (ஒன்றிரண்டு விதிவிலக்கு இருக்கும்)
2. மூன்று ஆண்டுகள் படிப்பும் ஓராண்டு பயிற்சியுமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.
3. அனைத்துப் படிப்புகளிலும் மனித உடல், அறிவியலின் அந்தந்த படிப்புகளுக்குத் தேவையான அடிப்படை உடற்கூறியல், இயங்குவியல், நுண்ணுயிரியியல், நோயியல், மருந்தியல் போன்றவை பயிற்றுவிக்கப்படுகின்றன.
4. இத்துடன் அடிப்படை ஆங்கிலக் கல்வி, அடிப்படை கணினிக் கல்வி, அடிப்படை தொழில் சார்ந்த அறம் போன்றவை பயிற்றுவிக்கப்படுகின்றன.

கீழ்காணும் படிப்புகளைத் தரவரிசை அடிப்படையில் அடுக்கவில்லை. எனவே அவரவர் விரும்பிய துறையை நன்கு ஆராய்ந்து தேர்வு செய்யலாம்.

### 1. B.Sc. விபத்து, அவசரச் சிகிச்சை தொழில் நுட்பம் (B.Sc Accident Emergency Care Technology)

இந்தப் படிப்பில் அவசரச் சிகிச்சைப் பிரிவில் (CASUALTY EMERGENCY DEPART MENTS) மருத்துவர்களுக்கும் செவிலியர் களுக்கு உதவும் வகையிலும் சிகிச்சைக்கான அடிப்படை அனைத்தும் பயிற்றுவிக்கப்படும்.

அவசரச் சிகிச்சைப் பிரிவில் நோயாளியைப் பரிசோதித்து அவருக்கு உரிய சிகிச்சையை வழங்குதல், அவசர அறுவைச் சிகிச்சைகள், அவசரச் சிகிச்சைப் பிரிவில் உபயோகப்படுத்தப்படும் மருத்துவ உபகரணங்கள் குறித்த அறிவும் போதிக்கப்படும்.

கல்வி பயிலும் மூன்று ஆண்டுகளும் ஆண்டிற்கு ஆயிரம் மணி நேரங்கள் நேரடி

யாக விபத்து, அவசரச் சிகிச்சைப் பிரிவில் நேரடியாகக் கல்வி கற்குமாறு இந்தப் படிப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. நான்காவது ஆண்டு பல்வேறு துறை (மருத்துவம், அறுவைச் சிகிச்சை, விபத்து சிகிச்சை, மகப்பேறு குழந்தைகள் அவசரச் சிகிச்சை) அவசரச் சிகிச்சைப் பிரிவுகள், தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் பயிற்சி எடுக்க வேண்டும்.

**எதிர்காலம்:** இதே துறையில் M.Sc. படிப்பு உள்ளது. அதைப் படிக்கலாம். சிறிய, பெரிய மருத்துவமனைகளில் அவசரச் சிகிச்சைப் பிரிவுகளில் விபத்து, அவசரச் சிகிச்சை தொழில் நுட்புநராக (B.Sc. Accident Emergency Care Technician) பணிபுரியலாம்.

**பின்குறிப்பு:** தொடர்ந்து அவசரச் சிகிச்சை நோயாளிகளைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். இரத்தம், சதை, எலும்பு போன்றவற்றைத் தினந் தோறும் பார்த்து சிகிச்சை அளிக்க வேண்டும். இரத்தம், சதை, மரணங்கள் போன்றவற்றைத் தாங்க மாட்டேன் என்பவர்கள் யோசித்து தேர்ந்தெடுக்க வேண்டும். எனக்கு இந்தச் சவால்களை ஏற்று உயிரைக் காப்பாற்றுவது பிடிக்கும் என்றால் நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டிய படிப்பு.

### 2. BASLP (B.Sc. Audiology Speech Language Pathology) B.Sc. செவிப் புலவியல் பேச்சு மொழி சார்ந்த நோயியல் தொழில் நுட்புநர்

இந்தப் படிப்பில் மனிதர்களின் செவித்திறன் குறைபாடு, காது கேளாமை, அதைக் கண்டறியச் செய்யப்படும் பரிசோதனைகள், காது கேளாதவர்களுக்கு எத்தகைய சிகிச்சை பரிந்துரை செய்வது? பேசுவதில் ஏற்படும் பிரச்னைகள், பேச்சு குளறுதல் அதற்குரிய சிகிச்சை, பேச்சுப் பயிற்சி அளித்தல், குழந்தைகளுக்குப் பேச்சுப் பயிற்சி அளித்தல் இவ்வாறாக செவிப்புலன், பேச்சு அதை ஒட்டிய அனைத்து நோய்கள் அதைத் தீர்க்கும் வழிகள் குறித்தும் பயிற்றுவிக்கப்படும்.

**எதிர்காலம்:** இதே துறையில் M.Sc. உள்ளது. காது மூக்கு தொண்டை நிபுணர்களுக்கு உதவும் வகையில் செவிப்புலன் பிரச்னையைக் கண்டறியும் நுட்புநர்களாக இருக்க முடியும். சுயமாகப் பேச்சுப் பயிற்சி அளிக்கும் நிபுணர்களாகவும் மாற முடியும். இவர்கள் ஆடியாலஜிஸ்ட் என்றும் ஸ்பீச் தெரபிஸ்ட் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

### 3. B.Sc. இதயம் சார்ந்த தொழில்நுட்பம் (B.Sc. Cardiac Technology)

இந்தப் படிப்பில் இதயம் சார்ந்த உடற்கூறு இயல், இயங்குவியல், நோயியல், நுண்ணுயிரியில், மருந்தியல், மருத்துவ உபகரணங்கள், மருத்துவ இயற்பியல் போன்றவை பயிற்றுவிக்கப்படும்.

இத்துடன் இசிஜி எடுப்பது, ட்ரெட் மில் பரிசோதனை எடுப்பது, ஹோல்டர் மானிட்டர் எனப்படும் தொடர் இசிஜி கண்காணிப்பு, தொடர் இரத்த அழுத்த கண்காணிப்பு, எக்கோ எடுப்பது எப்படி? என்பவை கற்றுத் தரப்படும். இத்துடன் ஆஞ்சியோகிராம், ஆஞ்சியோ ப்ளாஸ்டி, ஸ்டெண்ட் வைத்தல் போன்ற சிகிச்சைகளில் இதய மருத்துவருக்கு உதவுவது குறித்த நேரடி பயிற்சியும் வழங்கப்படும்.

**இறுதி ஆண்டு:** கேத் லேப் எனப்படும் ஆஞ்சியோ செய்யும் இடங்களில் மூன்று மாதம், எக்கோ பயிற்சி மூன்று மாதம், இதய நோய் தீவிர சிகிச்சைப் பிரிவில் மூன்று மாதம், ஹோல்டர் இசிஜி எடுக்கும் பயிற்சியில் மூன்று மாதம் நேரடி பயிற்சி பெற வேண்டும்

**எதிர்காலம்:** இதய நோய் சிறப்பு நிபுணர்களின் கேத் லேப்களில் அவர்களுக்கு உதவியாளர்களாக, தொழில் நுட்புநர்களாகப் பணிபுரிய முடியும். பெரிய மருத்துவமனைகளில் இசிஜி, எக்கோ, ட்ரெட்மில் போன்றவற்றைக் கையாளும் நுட்புநர்களாகப் பணியாற்ற முடியும்.

### 4. B.Sc. இதய நுரையீரல் இரத்த ஓட்ட தொழில்நுட்பம் (B.Sc. Cardio pulmonary Perfusion Techonology)

இந்தப் படிப்பு சார்ந்த இதயம், நுரையீரலுக்கான அடிப்படை மருத்துவக் கல்வி புகட்டப்படும். இத்துடன் இதயம், நுரையீரல் சார்ந்த அறுவைச் சிகிச்சைகளில்

குறிப்பாக பைபாஸ் அறுவைச் சிகிச்சைகளில் உபயோகப்படுத்தப்படும் இதய நுரையீரல் இயந்திரத்தைக் கையாள்வது குறித்த நேரடிப் பயிற்சி வழங்கப்படும்.

இதயத்தில் அறுவைச் சிகிச்சை நடக்கும் போது இதய அறுவைச் சிகிச்சை நிபுணருக்கு உதவியாக ஹார்ட் லங்க் மெஷினைக் கையாளும் நுட்புநராகப் பணி செய்ய வேண்டும். அந்த இயந்திரத்தைச் சுத்தம் செய்வது, தொற்று நீக்கம் செய்வது, பராமரிப்பது போன்ற விஷயங்கள் கற்றுத் தரப்படும்.

**எதிர்காலம்:** இதயம் சார்ந்த பைபாஸ் அறுவை சிகிச்சைகள், இதய அறுவைச் சிகிச்சை நடைபெறும் இடத்தில் இதய நோய் சிறப்பு அறுவைச் சிகிச்சை நிபுணர்களுக்கு உதவும் குழுவில் நுட்புநர்களாகப் பணி புரியலாம்.

### 5. B.Sc. மருத்துவ ஊட்டச்சத்தியல் தொழில் நுட்பம் (B.Sc. Clinical Nutrition)

இந்தக் கல்வியில் அடிப்படை மேம்பட்ட ஊட்டச்சத்தியல், அடிப்படை மேம்பட்ட உணவியல், உடல் இயங்குவியல், ஊட்டச் சத்து சார்ந்த உயிர் வேதியியல், உணவுத் துறை சார்ந்த நுண்ணுயிரியல், உணவுத்துறை அறிவியல், சமூக ஊட்டச்சத்தியல், உணவு சார்ந்த பரிந்துரை வழங்குதல் போன்றவை குறித்து களப்பயிற்சி வழங்கப்படும். பல்வேறு இணை நோய் கொண்ட மக்களுக்கு எவ்வாறு உணவு பரிந்துரை வழங்க வேண்டும் என்பது குறித்த கல்வி பயிற்றுவிக்கப்படும்.

**எதிர்காலம்:** மருத்துவமனைகளில் மருத்துவம் சார்ந்த ஊட்டச்சத்து, உணவியல் பரிந்துரையாளராகப் பணிபுரியலாம். சுயமாகவும் ஊட்டச்சத்து சார்ந்த உணவுமுறை பரிந்துரை செய்யும் நிபுணராக விளங்க முடியும்.

### 6. B.Sc. தீவிர சிகிச்சை தொழில்நுட்பம் (B.Sc Critical Care Technology)

இந்தப் படிப்பில் அடிப்படை மருத்துவக் கல்வியுடன் தீவிர சிகிச்சைப் பிரிவில் (INTENSIVE CARE) நோயாளிகளைக் கண்காணிப்பது குறித்து அடிப்படை, மேம்பட்ட கல்வி வழங்கப்படும். தீவிர சிகிச்சைப் பிரிவில் வழங்க வேண்டிய சிகிச்சைகள் குறித்தும் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் கையாளப்படும் வெண்ட்டிலேட்டர் போன்ற கருவிகளை இயக்குவது, பராமரிப்பது குறித்தும் தீவிர சிகிச்சைப் பிரிவின் நிர்வாகம், தேவையான பொருட்கள் மருந்துகள் நோயாளிகளின் புள்ளியியல் பராமரிப்பு, அறம் சார்ந்த கல்வியும் போதிக்கப்படும்.

**இறுதி ஆண்டு:** மருத்துவத்துறை, குழந்தைகள் நலத்துறை, இதய நலத்துறை, நுரையீரல் நலத்துறை போன்றவற்றின் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் பயிற்சி வழங்கப்படும்.

**எதிர்காலம்:** மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவுக்குழுவில் உறுப்பினராகப் பணிபுரியலாம்.

### 7. B.Sc. டயாலிசிஸ் டெக்னாலஜி (B.Sc. Dialysis Technology)

சிறுநீரகத் துறை சார்ந்த அடிப்படை மருத்துவக் கல்வி கற்றுத்தரப்படும். இத்துடன் சிறுநீரக செயலிழப்பில் உயிர்காக்கும் சிகிச்சையான டயாலிசிஸ் (இரத்த சுத்திகரிப்பு முறை) செய்ய உதவும் டயாலிசிஸ் இயந்திரத்தை இயக்கி நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கும் பயிற்சி முழு நேரமாக வழங்கப்படும்.

**எதிர்காலம்:** டயாலிசிஸ் சிகிச்சை வழங்கும் தொழில்நுட்புநர்களாக டயாலிசிஸ் சிகிச்சை மையங்களில் பணிபுரியலாம். இவர்களை 'டயாலிசிஸ் டெக்னீசியன்' என்று அழைக்கலாம்.

### 8. B.Sc. நரம்பியல் மின் இயங்குவியல் தொழில் நுட்பம் (B.Sc. Neuro Electro Physiology)

இந்தப் படிப்பில் மூளை, நரம்பியல் சார்ந்த அடிப்படை மருத்துவக் கல்வியுடன் ஈஈஜி எனப்படும் மூளை மின் இயங்குவியல் பரிசோதனை செய்வதற்கான பயிற்சி வழங்கப்படும். இதயத்துக்கு எப்படி

இசிஜியோ அது போல மூளைக்கு ஈஈஜி எடுக்கப்படுகிறது. இதை வைத்து நரம்பியல் நோய் சிறப்பு நிபுணர் ஒருவருக்கு வலிப்பு ஏற்படுகிறதா என்பதைக் கண்டறிவார்.

வலிப்பின் தன்மை தூண்டப்பட்ட வலிப்பா? அல்லது தூண்டப்படாமல் ஏற்படும் வலிப்பா? என்பது குறித்தும் அறியப்படும். இது மட்டுமன்றி நரம்பு வழி கடத்தப்படும் உணர்வுகள் குறித்த பரிசோதனை (Nerve conduction study), தசை வழி மின் ஓட்டப் பரிசோதனை (Electromyography), உறக்கத்தில் செய்யப்படும் மூளை இயங்குவியல் பயிற்சி (Polysomnography) கபால வழி மின் காந்த அலைகள் மூலம் மூளையைத் தூண்டி செய்யப்படும் மேம்பட்ட பரிசோதனைகள் குறித்தும் பயிற்சி வழங்கப்படும்.

**எதிர்காலம்:** நரம்பியல் சிறப்பு நிபுணர்கள் பரிந்துரைக்கும் இந்தப் பரிசோதனைகளை எடுக்கும் நுட்புநராகப் பணிபுரியலாம். மருத்துவமனைகளில் ஈஈஜி டெக்னிசியன், நியூரோ எலக்ட்ரோ ஃபிசியாலஜி டெக்னிசியனாகப் பணிபுரியலாம்.

### 9. B.Sc. மருத்துவ ஆய்வக நுட்புநர் (B.Sc. Medical Laboratory Technology)

இந்தப் படிப்பில் மருத்துவ சமூகவியல் (sociology), நோயாரின் மனோதத்துவவியல் (psychology), அடிப்படை மருத்துவத் துறை சார்ந்த கல்வி (Basic life sciences) இத்துடன் ஆய்வகம் நடத்துவதற்கு ஏதுவான நோயாளிகளிடம் இருந்து இரத்தம், சிறுநீர், மலம், சளி மாதிரிகளைப் பெறுவது குறித்த பயிற்சி.

திசு நோயியல், மாதிரிகளில் இருந்து செல்களை நுண்ணோக்கிகளில் மருத்துவர்கள் பார்த்து நோய் கண்டறியும் வகையில் தயார் செய்வது, குருதி நோயியல், எதிர்ப்பு சக்தியியல், நுண்ணுயிரியல், உயிர் வேதியியல் சார்ந்த அத்தனை ஆய்வகப் பரிசோதனைகள் பற்றியும் கற்றுத் தரப்படும்.

இறுதி ஆண்டில் நான்கு மாதங்கள் நோயியல் துறை ஆய்வகத்திலும், நான்கு மாதங்கள் நுண்ணியிரியல் துறை ஆய்வகத்திலும், நான்கு மாதங்கள் உயிர் வேதியியல் துறை ஆய்வகத்திலும் பயிற்சி பெற வேண்டும்

**எதிர்காலம்:** இந்தப் படிப்பு படித்தவர்கள் மருத்துவமனைகளின் ஆய்வகங்களில் ஆய்வக நுட்புநர்களாகப் பணிபுரியலாம் சுயமாக ஆய்வகங்கள் தொடங்கி நடத்தி சேவையாற்றலாம்.

### 10. B.Sc. மருத்துவ சமூகவியல் (B.Sc. Medical Sociolgy)

மருத்துவத் துறை சார்ந்த அடிப்படை மருத்துவக் கல்வி அத்துடன் சமூகத்தின் கலாச்சாரச் சூழல், சமூக, உடல் நலன் சார்ந்த மனோதத்துவவியல், சமூக நலன், சமூகம் சார்ந்த மருத்துவம், சமூகம் சார்ந்த ஆராய்ச்சிகள், மனித உரிமை, மருத்துவமனை நிர்வாக அடிப்படை, பேரிடர் மேலாண்மை, சூழலியல் போன்றவற்றில் கல்வி புகட்டப்படும்.

இறுதி ஆண்டில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை நோயாளிகளுக்கு கவுன்சிலிங் வழங்குவது, மருத்துவத்துறை ஆவணங்களைப் பராமரித்தல், நோய்களுக்கு ஏற்ற சரியான குறியீடுகளை வழங்குதல், மனநலம், மனோதத்துவ கவுன்சிலிங் வழங்குதல் போன்றவற்றில் பயிற்சி வழங்கப்படும்.

**எதிர்காலம்:** மருத்துவமனைகளில் ஆற்றுப்படுத்துதல் மையங்களில் பணிபுரியலாம். நோய் குறித்த மனம் சார்ந்த ஆற்றாமை, அச்சங்களைப் போக்கும் கவுன்சிலர்களாகச் செயல்படலாம். உறுப்பு மாற்று கவுன்சிலராகச் செயல்படலாம். அரசு சார்பற்ற இயக்கங்கள் மூலம் சமூக நலனுக்காக உழைக்கலாம். அரசின் சமூக நலன் சார்ந்த இயக்கங்களில் பங்கெடுக்கலாம். மெடிக்கல் ட்ரான்ஸ்க்ரிப்சன் துறையில் பணிபுரியலாம். மருத்துவம் சார்ந்த சுற்றுலாவை மேற்பார்வை, நிர்வகிப்பவர்களாகப் பணிபுரியலாம்.

*(மீதமுள்ள 10 படிப்புகள் அடுத்த இதழில்...)*



# இறை அழைப்பை ஏற்ற இனிய அழைப்பாளர்

# மௌலானா அப்துல் ஹஃபீஸ் ரஹ்மானி

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் மூத்த உறுப்பினர். தம் வாழ்நாளின் பெரும்பகுதியை சற்றேறக்குறைய 70 ஆண்டுகளாக இஸ்லாமிய இயக்கத்திற்காகச் செலவிட்டவர். தமிழ் மாநில அமைப்புச் செயலாளர், வேலூர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தலைவர் உள்ளிட்ட பல பொறுப்புகளை ஏற்றுச் செயல்பட்டவர். ஏழு மீகாத்களாக (28 ஆண்டுகள்) மாநில ஆலோசனைக் குழு உறுப்பினராகப் பங்களிப்பை வழங்கியவர். இஸ்லாமிக் சென்டர் வேலூரின் அடிநாதமாகத் திகழ்ந்ததோடு அதன் முதல் துணைப் பொதுச் செயலாளராக, முதல் ஆசிரியராகப் பணியாற்றியவர். பன்னூல் ஆசிரியர் மௌலானா அப்துல் ஹஃபீஸ் ரஹ்மானி அவர்கள் 25/04/2025 அதிகாலை இறைவனின் அழைப்பை ஏற்றார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். (நாம் இறைவனிடமிருந்து வந்தோம். அவன் பக்கமே மீளக்கூடியவர்களாய் இருக்கின்றோம்.)

ஹஃபீஸ் ரஹ்மானி அவர்கள் அழைப்புப் பணியில் பேரார்வம் கொண்டவர். புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய சகோதரர்களைச் சந்திக்க தென் மாவட்டங்களின் கிராமங்களுக்கு அதிகம் பயணம் செய்தார். இஸ்லாமிக் சென்டர் வேலூரில் உருவாவதற்கு அவரது அழைப்பின் தாகம் ஓர் உந்து சக்தியாக இருந்தது. தமது சொல்லால் மட்டுமின்றி எழுத்தாலும் இறைமார்க்கச் செய்தியை அனைவரிடமும் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதற்காகவே பல நூல்களை எழுதினார்.

நபி(ஸல்)அவர்கள் தாம் வாழும் காலத்தில் பல நாட்டு மன்னர்களுக்கு இஸ்லாத்தின் செய்தியைக் கடிதங்களின் வாயிலாக எடுத்துரைத்தார்கள். அதை அழகிய முன்மாதிரியாகக் கொண்டு அன்றைய குஜராத் முதல்வர் மோடி, அத்வானி, மோகன் பகவத் உள்ளிட்ட பலருக்கும் அழைப்பியல் ரீதியாகக் கடிதம் எழுதியுள்ளார். அதுபோல ஃபலஸ்தீன விவகாரத்தில் சவூதி அரேபியா நடந்துகொண்ட முறை அநீதியானது என்பதைச் சுட்டிக்காட்டி, இடித்துரைத்து சவூதி மன்னருக்கும் கடிதம் எழுதியுள்ளார்.

புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய சகோதர சகோதரிகளுக்காகத் தொடங்கப் பட்ட பெண்களுக்கான குல்லியத்துல் மஆரிஃப், ஆண்களுக்கான குல்லியத்துஸ் ஸலாம் கல்லூரிகளின் மூலம் இஸ்லாமியப் பட்டப்படிப்பைத் தொடங்கிய போது சிறப்பான பங்களிப்பை வழங்கினார். இஸ்லாமிக் சென்டர் வேலூர் பிரைமரி நர்சரி பள்ளியைத் தொடங்கி வெற்றிகரமாக நடத்தியவர். மிகச் சிறந்த நிர்வாகியாகவும் மௌலானா அவர்கள் திகழ்ந்தார்கள்.

சமய நல்லிணக்கத்திலும் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவர். மதுரை ஆதீனம், குன்றக்குடி அடிகளார் போன்ற ஆன்மிகத் தலைவர்களைச் சந்தித்துப் பேசியுள்ளார். சங்கரமடத்திற்குச் சென்று சங்கராச்சாரி யாருக்குத் திருக்குர்ஆனை வழங்கி உரை யாடினார். குன்றக்குடி அடிகளார் தொடங் கிய திருவருட் பேரவையின் துணைச் செயலாளராகவும் பங்களிப்பு செய்தவர். சமய நல்லிணக்க நிகழ்வுகளின் தொடக்கப் புள்ளியாக இருந்தார். ஈரோடு தமிழன்பன் உள்ளிட்ட பல்வேறு ஆளுமைகளை அழைத்து நிகழ்வுகளை நடத்தினார். அதுவே மீலாது நிகழ்வுகளில் சகோதர சமுதாய ஆளுமைகளை அழைத்துப் பேசுவதற்கான தொடக்கமாக இருந்தது.

சமரசம் இதழைத் தொடர்ந்து வாசிப்ப தோடு நல்ல அம்சங்களைப் பாராட்டுவதுடன், தவறுகளைச் சுட்டிக் காட்டவும் செய்வார். முக்கியமான நிகழ்வுகள் குறிப்புகள் இருந் தால் அதனை நகலெடுத்து அனுப்பி சமரசம் இதழில் பிரசுரிக்க அனுப்புவார். மௌலானா அவர்களின் ஆக்கமும் சமரசம் இதழில் இடம் பெற்றுள்ளன.

ஆழ்ந்த இறைப்பற்றும், ஆழமான சிந்தனையாற்றலும் கொண்ட மௌலானா அவர்கள் தம் இறுதி மூச்சுவரை இறை மார்க்கப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். மிகச் சிறந்த ஆளுமையான மௌலானா ஹஃபீஸ் ரஹ்மானி அவர்களின் இழப்பு இஸ்லாமிய அறிஞர்களின் உலகில் ஏற்பட்ட மிகப் பெரும் இழப்பாகும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் மௌலானா அவர்களின் பணிகளை ஏற்று அங்கீகரித்து அருள்புரிவானாக! உயரிய சுவன பாக்கியத்தை வழங்குவானாக! அவரது குடும்பத்தினர், இயக்கத் தோழமைகள் அனைவருக்கும் அழகிய பொறுமையை வழங்குவானாக!

**– மௌலவி முஹம்மத் ஹனீஃபா மன்பயீ**
**மாநிலத் தலைவர், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், தமிழ்நாடு, புதுச்சேரி**


**அல்-அமீன் எத்தீம் கானா**
**அல்-அமீன் நகர், கோ.புதூர், மதுரை-7**

**மாணவர் சேர்க்கை**

- தாய், தந்தை இழந்த, ஆதரவற்ற, ஏழ்மையான 8 வயதிற்கு மேற்பட்ட ஆண் பிள்ளைகள் மட்டும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.
- சுகாதாரமிக்க தங்கும் இடவசதியுடன் நல் உணவு, உடை, மருத்துவம், உயர்கல்வி, முழுமையான மார்க்க கல்வி என அனைத்தும் முற்றிலும் இலவசமாக வழங்குகிறோம்.

மேலும் விபரங்களுக்கு : **98420 21786, 97894 89494**

# சேவைத் துறையை நோக்கி ITI கல்வி

**- கல்வியாளர் வாஜித் ஷா**

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஏற்பட்ட கைவினைத் திறன் பற்றாக்குறையின் காரணமாக ITI தொழிற்பயிற்சி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. இவை பள்ளி மாணவர்களுக்குத் தொழிற்கல்வியை வழங்குகின்றன. வேலையின்மைப் பிரச்னையை நீக்குவதற்கும் பயிற்சி வழங்கப்படுகிறது. பணி செய்யும் திறனை மேம்படுத்துவது, புதிய தெழில்நுட்பங்களை மாணவர்களுக்கு வழங்கி வேலைக்குத் தயாராக்குவது, தொழிற்சாலைகளுக்குத் தேவையானவர்களை பயிற்றுவிப்பது இதன் முக்கிய நோக்கமாகும். தனித்திறன்களை வளர்ப்பதன் மூலமாக சுயவேலை வாய்ப்பையும் ஏற்படுத்துகிறது. கல்விக்கும் தொழிற்சாலைக்கும் பாலமாக இவை விளங்குகின்றன.

உள்கட்டமைப்பு வசதிகள், உபகரணங்கள் பற்றாக்குறை, சிறந்த பயிற்சியாளர்கள் இன்மை, புதிய தொழில்நுட்பங்களைப் பாடமுறையில் கொண்டுவருவதில் தாமதம், போதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கத் தவறியது, கல்வி நிறுவனங்களுக்கும் தொழிற்சாலையின் தேவைக்கும் உள்ள இடைவெளி, அரசு நிதி ஒதுக்குவதிலும் செலவு செய்வதிலும் உள்ள குறைபாடுகள் என பல பிரச்னைகள் ITIயில் உள்ளன.

இப்பொழுது என்.சி.வி.டி. எடுத்த முயற்சியால் புதிய தொழில் நுட்பங்களான AI, ட்ரோன் பயிற்சி போன்றவை ITIயில் சேர்க்கப்பட்டுள்ளன. 2024-25இல் 12,700 ITIகளின் தரம் 4 என்கிற குறியீட்டைக் கடந்துள்ளது. கடந்த ஆண்டில் 11,900 ITI நிறுவனங்கள் மட்டுமே இந்தத் தரத்தில் இருந்தன.

### ITI தரவரிசை

1. இந்தியாவில் முதல் இடத்தில் ITI பானிபட்டில் உள்ள பெண்கள் தேசியப் பயிற்சி நிறுவனம் உள்ளது. சிறந்த பயிற்சியாளர்கள், சிறந்த உள்கட்டமைப்பு வசதிகள், ஏர் கண்டிஷன் வசதி போன்றவை இதன் சிறப்புகளாகும். இதில் சேரவேண்டும் என்றால் ஏ.ஐ.சி.இ.டி. நுழைவுத் தேர்வில் வெற்றி பெற வேண்டும். இந்தத் தேர்வை டைரக்டரேட் ஜெனரல் ஆஃப் டிரைனிங் நடத்துகிறது. பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2. ஒடிசாவிலுள்ள பார்பில் அரசு தொழில் பயிற்சி நிறுவனம். இது 1964இல் தொடங்கப்பட்டது. பத்தாம் வகுப்பில் எடுக்கும் மதிப்பெண் அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

3. பஞ்சாபின் பனுரிலுள்ள அரசு தொழிற்சாலை பயிற்சி நிறுவனம். வேலைவாய்ப்பை மையப்படுத்திய தொழில்நுட்பப் பயிற்சியை வழங்குகிறது.

4. ஆந்திராவின் நெல்லூரிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிறுவனம். குறிப்பிடத்தக்க பிற முக்கியமான தொழிற்பயிற்சி நிறுவனங்கள் உத்திரப்பிரதேசத்தின் சாம்பல் புரிலும், ஆந்திராவின் கர்நுலிலும் உள்ளன.

முன்பு கட்டுமானப் பணிகள், துணி தொழிற்சாலை, உணவு பானம் போன்ற தொழிற் தேவைகளைப் பூர்த்தி செய்தது. தற்பொழுது கணினி மென்பொருள் போன்ற சேவைத்துறைகளிலும் பயன்படுகிறது. காலத்திற்கேற்ற அணுகுமுறைகளை கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. குறைவான கல்வி கற்றவர்கள் வசதி குறைந்தவர்களுக்கான வாய்ப்புகள் இங்குள்ளன. எனினும் அரசு கொள்கை ரீதியான மாற்றங்களைச் செய்து உள்கட்டமைப்புகளை ஏற்படுத்தி மாணவர்களுக்குச் சிறந்த எதிர்காலத்தை உறுதிப்படுத்த வேண்டும். இல்லையெனில் குலக்கல்வியின் மற்றொரு வடிவமாக ITIகள் மாறிவிடும் அபாயமுள்ளது. எனவே தொழிற்சாலைகளின் தேவைகளை நிறைவேற்றுவதுடன் நின்றுவிடாமல் சேவைத் துறைக்கேற்ற புதிய பாடத்திட்டங்களைக் கொண்டு வர வேண்டும்.

بسم الله الرحمن الرحيم

# ஆயிஷா சித்தீக்கா மகளிர் இஸ்லாமியக் கல்லூரி

**காயல்பட்டணம், தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு.**

## பெண்களின் இஸ்லாமிய கல்வித்திறன் மேம்பட

35 வருடத்திற்கும் மேலாக இயங்கி வருகிறது நமது கல்லூரி

### பாட திட்டங்கள்

- 3 வருட ஆலிமா படிப்பு
- ஹிஃப்ளு - குர்ஆன் மணன பிரிவு(3 வருடம்)
- ஞாயிறுதோரும் தீனிய்யாத் வகுப்புகள்
- அஃப்ஜலுல் உலமா பட்டப்படிப்பு
- தொலைதூரக் கல்வி - B.A| B.Com| BBA| M.A| M.Com
- ஆங்கிலம் மொழி பயிற்சி, கணினி பயிற்சி, மற்றும் தையல் பயிற்சி வழங்கப்படுகிறது
- முபல்லிகா - ஓராண்டு கல்வித்திட்டம். (திருமணமான பெண்களுக்கு மட்டும்)
- குர்ஆன் வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்ப்பு

### புதிய வருட ஆரம்ப தேதி

ஆலிமா & ஹிஃப்ளு
**15 ஜுன் 2025**

### நேர்முகத் தேர்வு

ஹிஃப்ளு- **மே 3,4,10,11**
ஆலிமா - **மே 17,18**





### சிறப்பம்சங்கள்

800 க்கும் மேற்பட்ட பெண்கள் ஆலிமா பட்டம் பெற்றுள்ளனர்.

ஆலிமா பட்டம் பெற்ற மாணவிகள் மதரஸாக்கள், மக்தப்கள், பள்ளி மற்றும் கல்லூரிகளில் முதன்மை ஆசிரியர்களாகவும் பணியாற்றி வருகின்றனர்.

### மதீனா & உம்முல் குறா

பல்கலைகழக பாடதிட்டத்தின் அடிப்படையில்



### பாடங்கள்

- அரபு மொழி இலக்கணம்
- குர்ஆன் விளக்கம்
- குர்ஆன் தஜ்வீத்
- அகீதா
- சீறா
- ஹதீஸ்
- ஃபிக்ஹ்
- வாரிசுரிமை சட்டங்கள்
- குர்ஆன் மனனம்(3 ஜுஸ்வு)

**குறிப்பு:** நல்ல உணவு மற்றும் சுகாதாரமான / பாதுகாப்பான சூழலில் ஹாஸ்டல்(விடுதி) வசதி உண்டு

**மேலும் விவரங்களுக்கு +91 99946 36809 / +91 73588 32509**

# சட்டத்தை ஆதாயத்திற்காகப் பயன்படுத்தக் கூடாது!

**'...உங்களுடைய உள்ளங்களில் இருப்பவற்றை அல்லாஹ் நன்கறிவான். மேலும் அல்லாஹ் யாவும் அறிந்தவனாகவும், சகிப்புத் தன்மையுடையவனாகவும் இருக்கின்றான்.[91] இதற்குப் பின்னர், வேறு பெண்கள் உமக்கு ஆகுமானவர்களல்லர். மேலும், இம்மனைவியருக்குப் பகரமாக நீர் வேறு மனைவியரை ஏற்படுத்திக் கொள்வதற்கும் அனுமதியில்லை. அவர்களின் அழகு உமக்கு மிகவும் பிடித்தமான தாயினும் சரியே![92] ஆயினும் உமக்கு அடிமைப் பெண்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.[93] அல்லாஹ் யாவற்றையும் கண்காணிப்பவனாய் இருக்கின்றான்'.**

**● அத்தியாயம் 33 : அல்அஹ்ஸாப் ● திருவசனங்கள் : 51, 52**

**91.** கண்ணியத்துக்குரிய தூய்மையான நபி(ஸல்) அவர்களின் மனைவியருக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கைதான் இது. மேலும் மற்ற அனைவருக்கும்கூட இது பொருந்தும். கண்ணியத்துக்குரிய தூய்மையான மனைவியருக்கான எச்சரிக்கை என்னவெனில், அல்லாஹ்விடமிருந்து இந்தச் சட்டம் வந்த பிறகு அவர்கள் மனத்திலும் கூட வருத்தத்தைச் சுமந்தார்கள் எனில், அல்லாஹ்வின் பிடியிலிருந்து தப்ப மாட்டார்கள்.

மேலும் மற்றவர்களுக்கு இதில் இருக்கின்ற எச்சரிக்கை என்னவெனில், அவர்கள் மனதிலும்கூட நபிகளாரின் குடும்ப வாழ்வு தொடர்பாக ஏதேனுமோர் ஐயத்தையோ, தவறான கருத்தையோ கொண்டிருப்பார்களேயானால், மனதின் ஓரத்தில் சிந்தனையின் விளிம்பில் ஏதேனுமொரு தவறான எண்ணத்தை வளர்த்துக் கொண்டிருந்தார்களேயானால் அவர்களின் இந்தக் கள்ளத்தனம் அல்லாஹ்விடமிருந்து மறைந்து இருக்காது என்பதாகும். இதனுடன் அல்லாஹ்வின் பண்புகளில் ஒன்றான சகிப்புத் தன்மையும் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. அதிலிருந்து ஒருவர் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், நபிகளாரின் கண்ணியத்துக்குக் களங்கம் விளைவிக்கின்ற சிந்தனை மனதில் எட்டிப் பார்த்தாலும் அது தண்டனைக்குரியதே.

என்றாலும் ஒருவரின் உள்ளத்தில் எப்போதேனும் இந்த மாதிரியான சஞ்சலங்கள் எட்டிப் பார்க்க அவர் அதனை அப்படியே அகற்றி எறிந்துவிடுகின்றார் எனில், வல்லமையும் மாண்பும் நிறைந்த இறைவன் அவரை மன்னித்துவிடுவதற்கான சாத்தியமும் இருக்கின்றது என்பதை உணர்த்துகின்ற விதத்தில்தான் அல்லாஹ் சகிப்புத்தன்மையுடையவன் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**92.** இதற்கு இரண்டு பொருள்கள் உண்டு. ஒன்று: 'மேலே வசன எண் 50இல் நபிகளாருக்கு ஆகுமானவர்களாய் ஆக்கப்பட்ட பெண்களைத் தவிர வேறு எந்தவொரு பெண்மணியும் இப்போது நபிகளாருக்கு ஆகுமானவர்கள் அல்லர்.'

இரண்டு: 'இப்போது உம்முடைய கண்ணியத்துக்குரிய தூய்மையான மனைவியர் சிரமத்திலும் நஷ்டத்திலும் உமக்கு உறுதுணையாக இருப்பதற்கு மனப்பூர்வமாக முன் வந்த நிலையில், மறுமைக்காக உலகத்தை அவர்கள் உதறித் தள்ளிவிட்டுள்ள நிலையில், நீர் அவர்களுடன் எவ்வாறு வேண்டுமானாலும் நடந்து

28ஆம் பக்கம் பார்க்க...

● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

# இறைத்தூதர்களின் வாரிசுகள்

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ஒருவர் கல்வியைத் தேடி ஒரு பாதையில் செல்கின்றார் எனில் இறைவன் அவருடைய அந்தச் செயலுக்காக அவரை சுவனத்திற்கான ஒரு பாதையில் போக வைக்கின்றான். அறிவைத் தேடி கிளம்பிய அந்த மாணவரின் மகிழ்ச்சிக்காக வானவர்கள் தங்களின் சிறகுகளை விரிக்கின்றார்கள். திண்ணமாக வானங்களிலும் பூமியிலும் இருக்கின்ற அனைத்தும் அறிஞரின் ஈடேற்றத்திற்காகப் பிரார்த்திக்கின்றன. இன்னும் சொல்லப் போனால் தண்ணீரில் இருக்கின்ற மீன்களும் (அவருக்காகப் பிரார்த்திக்கின்றன).**

**மற்ற இரவுகளை விட பௌர்ணமி இரவு தனிச்சிறப்பு மிக்கதாய் இருப்பதைப் போல வணக்கசாலியை விட அறிஞர் சிறப்பு வாய்ந்தவர் ஆவார்.[1] ஐயத்திற்கிடமின்றி அறிஞர்கள் தாம் இறைத்தூதர்களின் வாரிசுகள் ஆவர். இறைத்தூதர்கள் தீனார்கள், திர்ஹம்கள் ஆகியவற்றின் வாரிசுகளாய் எவரையும் ஆக்கியதில்லை. அவர்கள் அறிவைத்தான் விட்டுச் சென்றிருக்கின்றார்கள். எவர் அறிவை ஈட்டிக் கொள்கின்றாரோ அவர்தான் முழுமையான பங்கை அடைந்தவர் ஆவார்'.[2]**

அறிவிப்பாளர் : அபூதர்தா(ரலி) நூல் : அபூதாவூத்

1. அபூஉமாமா(ரலி) அவர்களின் அறிவிப்பில் பின்வரும் வாசகங்கள் இடம் பெற்றுள்ளன: 'உங்களில் ஒருவரை விட எனக்கு எந்த அளவுக்குச் சிறப்பு இருக்கின்றதோ அந்த அளவுக்கு வணக்கசாலியை விட அறிஞர் சிறப்பு வாய்ந்தவர் ஆவார்.'(திர்மிதி)

2. இஸ்லாத்தில் கல்விக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் தரப்பட்டிருக்கின்றது என்பதை எளிதாகக் கணித்துக் கொள்ளலாம். இறைத்தூதர்கள் இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்ட போது அவர்கள் கொண்டு வந்த ஒரே செல்வம் மார்க்க அறிவு மட்டுமே. அதனைத்தான் அவர்கள் தமக்குப் பின்னால் பங்கிட்டுக் கொள்ளப்பட வேண்டிய சொத்தாக(legacy) விட்டுச் சென்றிருக்கின்றார்கள்.

இந்தச் சொத்து எல்லோருக்கும் பொதுவானதாய் விட்டுச் செல்லப்பட்டிருக்க, அதிலிருந்து பயன்பெறத் தவறுவதை விட வாய்ப்புக்கேடு வேறு எதுவும் இல்லை. எவர் அந்த அறிவை வளர்த்துக்கொள்கின்றாரோ அவர்தான் உண்மையில் இறைத்தூதர்கள் விட்டுச் சென்ற சொத்தின் முழுமையான பங்கை அடைந்தவர் ஆவார். எண்ணிக்கையில் குறைவானவற்றுக்குப் பதிலாக அதிக எண்ணிக்கை கொண்டவற்றுக்கும், மதிப்பில்லாதவற்றுக்குப் பதிலாக மதிப்புள்ளவற்றுக்கும் அவர் முன்னுரிமை கொடுத்து விரும்பித் தேர்ந்தெடுத்துக்கொண்டார்.

பேரண்டத்தில் இருக்கின்ற படைப்புகள் அனைத்துமே கற்றறிந்த அறிஞரை நேசிக்கின்றன. பேரண்டம் முழுவதிலும் அந்த அன்பின் வாசத்தை எடுப்பாக உணர முடியும். இன்னும் சொல்லப் போனால் வானவர்களும் இத்தகைய மனிதர் மீது அளவிலா அன்பு கொள்கின்றனர்.

**நபிமொழி விளக்கம் ✦ மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான் ✦ தமிழில் : அபூ ஹானியா**

26ஆம் பக்கத் தொடர்ச்சி...
கொள்ளலாம் என்பதையும் அவர்கள் மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டிருக்க, அவர்களில் எவரேனும் ஒருவருக்குத் தலாக் கொடுத்துவிட்டு அவருக்குப் பதிலாக வேறொருவரை உம்முடைய மனைவியாக ஆக்கிக் கொள்வது உமக்கு ஆகுமானதல்ல.'

**93.** நிக்காஹ் செய்து கொண்ட மனைவியர் மட்டுமின்றி வலக்கரம் சொந்தமாக்கப்பட்ட பெண்களை அனுபவிப்பதற்கும் அனுமதி உண்டு என்பதையும் மேலும் அவர்களின் எண்ணிக்கைக்கு எந்த வரம்பும் கிடையாது என்பதையும் இந்த வசனம் தெள்ளத்தெளிவாக உணர்த்துகின்றது. இதே கருத்து அத்தியாயம் 4 அன்னிஸா வசன எண் 3, அத்தியாயம் 23 அல்முஃமினூன் வசன எண் 6, அத்தியாயம் 70 அல்மஆரிஜ் வசன எண் 30 ஆகிய வசனங்களிலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த வசனங்கள் அனைத்திலும் வலக்கரம் சொந்தமாக்கப்பட்ட பெண்கள் மணம் செய்து கொள்ளப்பட்ட மனைவியருடன் சேர்க்கப்படாமல் தனி இனமாக, வகையாகத் தாம் குறிப்பிடப்படுகின்றார்கள். மேலும் அவர்களுடன் திருமண உறவு வைத்துக் கொள்வது ஆகுமானதாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அது மட்டுமின்றி அத்தியாயம் அன்னிஸாவின் மூன்றாவது வசனத்தில் மணம் செய்துகொள்ளப்பட்ட மனைவியரின் உச்ச வரம்பு நான்கு என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இறைவன் அந்த வசனத்திலும் வலக்கரம் சொந்தமாக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கைக்கு உச்சபட்ச வரம்பை விதிக்கவில்லை. மேலும் இது தொடர்பான இதர வசனங்களிலும் இது போன்ற எந்தவொரு வரம்பு குறித்து எதுவும் சொல்லப்படவில்லை. அதற்கு மாறாக இங்கு நபிகளாரை விளித்து, இதற்குப் பின்னர், வேறு பெண்களை மணம் முடிப்பதோ தற்போதைய மனைவியரை தலாக் செய்துவிட்டு வேறு பெண்களை மணம் முடிப்பதோ ஆகுமானதல்ல. அதற்கு மாறாக வலக்கரம் சொந்தமாக்கப்பட்ட பெண்கள் ஆகுமானவர்கள் ஆவர்' என்று சொல்லப்படுகின்றது. இதிலிருந்து வலக்கரம் சொந்தமாக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கைக்கு எந்தவிதமான உச்ச வரம்பும் விதிக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது.

ஆனால் இறைவனின் ஷரீஅத்தின் இந்தச் சலுகை இனி கணக்குவழக்கு இல்லாமல் ஏராளமான அடிமைப்பெண்களை விலைக்கு வாங்கி உல்லாசமாக இருப்பதற்கான அனுமதியை செல்வந்தவர்களுக்குத் தருகின்றது என்று இதற்குப் பொருள் அல்ல. அதற்கு மாறாக உலக மோகத்தில் திளைத்து மன இச்சைகளை வழிபடுகின்ற ஆசாமிகள் இந்தச் சட்டத்திலிருந்து முறையற்ற ஆதாயம் தேடியிருக்கின்றார்கள் என்றுதான் சொல்ல முடியும். மக்களின் வசதிக்காகத்தான் சட்டம் வகுக்கப்பட்டது. அதிலிருந்து ஆதயாம் தேடுவதற்காக அல்ல.

இதற்கு எடுத்துக்காட்டாக ஒருவர் நான்கு பெண்கள் வரை திருமணம் செய்து கொள்ளலாம் என ஷரீஅத் அனுமதி அளிக்கின்றது. தம்முடைய மனைவியை தலாக் செய்கிற, அவளுடைய இடத்தில் வேறு ஒரு பெண்ணை மணம் முடித்துக் கொள்கின்ற உரிமையையும் ஷரீஅத் தந்துள்ளது. இந்தச் சட்டம் மனிதனின் தேவைகளைக் கருத்தில் கொண்டுதான் வகுக்கப்பட்டது. இப்போது ஒரு மனிதர் வெறுமனே தம்முடைய இச்சைகளைத் தணித்துக் கொள்வதற்காக, உல்லாசமாக வாழ்வதற்காக நான்கு பெண்களை மணம் முடிக்கின்றார்; அவர்களோடு சில காலம் வாழ்ந்த பிறகு அவர்களைத் தலாக் செய்துவிட்டு அவர்களின் இடத்தில் வேறு நான்கு பெண்களை மணம் முடித்துக் கொள்கின்றார் எனில் அது சட்டம் தருகின்ற சலுகையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஆதாயம் தேடுவதாகும். அதற்கு அந்த மனிதர்தான் பொறுப்பாவார். இறைவனின் சட்டம் பொறுப்பாகாது.

இதே போன்று போரின் போது கைது செய்யப்படுகின்ற பெண்களை - அவர்களின்

சமூகம் முஸ்லிம் கைதிகளை விடுவித்து அவர்களை மீட்டுக்கொள்வதற்கோ, ஃபித்யா கட்டணம் கொடுத்து மீட்டுக்கொள்வதற்கோ ஆயத்தமாகாத போது, அவர்களை அடிமைப் பெண்களாய் ஆக்கிக் கொள்வதற்கு ஷரீஅத் அனுமதிக்கின்றது. அரசு அவர்களை எந்த மனிதர்கள் வசம் ஒப்படைக்கின்றதோ அந்த மனிதர்களுக்கு அவர்களை அனுபவிப் பதற்கான உரிமையும் உண்டு. சமூகத்தில் ஒழுக்கச் சீர்கேடு பரவக் கூடாது என்பதற் காகத்தான் இந்த ஏற்பாடு.

மேலும் போரின் போது கைது செய்யப் படுகின்றவர்களின் எண்ணிக்கையை வரை யறுக்க இயலாது என்பதால் ஒரு மனிதர் ஒரே நேரத்தில் எத்துணை அடிமைகளையும் எத்துணை அடிமைப் பெண்களையும் தம் வசம் வைத்திருக்கலாம் என இவர்களின் எண்ணிக்கைக்கான உச்ச வரம்பை சட்ட ரீதியாக வரையறுப்பதற்கும் சாத்தியம் இல்லாமல் போனது. ஓர் அடிமைக்கோ அடிமைப் பெண்ணுக்கோ அவர்களின் எஜமானனோடு ஒத்துப் போகாத போது ஒரே ஆளின் ஆளுகையின் கீழ் காலமெல்லாம் கழிக்க வேண்டிய கட்டாயம் அடிமை, எஜமானன் ஆகிய இரு தரப்பினருக்கும் வேதனை தரும் என்பதால் அவர்கள் வேறு ஒருவர் வசம் மாற்றப்படுவதை சாத்தியம் ஆக்குவதற்காகத்தான் அடிமைப்பெண் களையும் அடிமைகளையும் விற்கின்ற, விலை கொடுத்து வாங்குகின்ற நடைமுறை கூட ஆகுமானதாக்கப்பட்டிருந்தது.

ஷரீஅத்தின் இந்த நெறிமுறைகள் அனைத்தும் மனித வாழ்வின் நிலைமைகள், தேவைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வசதிக்காக வேண்டித்தான் வகுக்கப் பட்டன. பணக்காரர்கள் தங்களின் உல்லாச சொகுசு வாழ்வுக்கான வழிவகையாக இவற்றை ஆக்கிக் கொள்கின்றார்கள் எனில், அதற்கான பழி அவர்களைத்தான் சேருமே தவிர ஷரீஅத் அதற்குப் பொறுப்பாகாது.

(தொடரும்)






மும்மொழிக் கொள்கை

அவர்களின் வாதமும் நமது பதில்களும்..!

- சேயன் இப்ராகிம்

தமிழ்நாடு அரசும், ஒன்றிய அரசும் இணைந்து நிதிஉதவி வழங்கி செயல்படுத்துகின்ற சமக்ரா சிக்ஷா அபியான் என்ற திட்டத்திற்கு ஒன்றிய அரசு இதுவரை தனது பங்களிப்பை தமிழ்நாட்டிற்கு வழங்கவில்லை. தமிழகக் கல்வி அமைச்சர் நேரில் சென்று சம்பந்தப்பட்ட ஒன்றிய அமைச்சரைச் சந்தித்து வலியுறுத்திய பின்னரும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அமைச்சருக்கும் பிரதமருக்கும் கடிதங்கள் எழுதிய பின்னரும் இதுவரை நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையை ஏற்று கையெழுத்திட்டால் தான் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் வெளிப்படையாகவே பேசினார்.

புதிய கல்விக் கொள்கையில் மும்மொழிக் கல்வித் திட்டம் கட்டாயமாக்கப் பட்டுள்ளது. எனவே இரு மொழிக் கொள்கையைக் கடந்த 57 ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறைப்படுத்தி வருகின்ற தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையை ஏற்க மறுக்கிறது. புதிய கல்விக் கொள்கையில் மூன்றாவது மொழியாக இந்தி கற்பிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. எனவே இதனை ஏற்க முடியாதென தமிழ்நாடு அரசு தெளிவாகத் தெரிவித்து விட்டது. எவ்வளவு நிதி இழப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை. மும்மொழிக் கொள்கையை ஏற்க மாட்டோம் எனத் தமிழ்நாடு முதல்வர் தெளிவாகவே அறிவித்து விட்டார்.

தமிழ்நாட்டு பாஜக தலைவர்கள், தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிதியை ஒன்றிய அரசு வழங்காமல் இருப்பது குறித்து எதுவும் கூறவில்லை. மாறாக தமிழ்நாடு அரசின் மொழிக் கொள்கையை கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றனர்.

அவர்களின் வாதமும் நமது பதில்களும்

1. தமிழ்நாட்டிலுள்ள மத்திய அரசுப் பள்ளிகளிலும், தனியார்கள் நடத்துகின்ற பள்ளிகளிலும் இந்தி மொழி கற்பிக்கப் படுகின்ற போது, அரசுப் பள்ளிகளில் இந்தி மொழியைக் கற்றுக் கொடுக்க ஏன் மறுக்க வேண்டும்? என்பது அவர்களது முதன்மையான கேள்வியாகும். தமிழ்நாட்டில் இப்போது இருக்கின்ற திமுக அரசும் சரி, இதற்கு முன்னர் பொறுப்பில் இருந்த அதிமுக, திமுக அரசுகளும் சரி இருமொழிக் கொள்கையையே கடைப்பிடித்து வந்தனர்.

மக்கள் இதனை நன்றாகத் தெரிந்து தான் அவர்களுக்கு வாக்களித்து ஆட்சியில் அமர்த்தியுள்ளனர். இருமொழிக் கொள்கையை

சமரசம் 12 16-31 மார்ச் 2025

# கல்வியில் மொழியைத் திணிக்காதீர்!

- ச.அய்யம்பிள்ளை

மேனாள் பேராசிரியர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

**இன்று தமிழ்நாட்டின் பட்டி தொட்டிகள் முதல் இந்தியாவின் நாடாளுமன்றம் வரை விவாதிக்கப்படக்கூடிய தலைப்பில், சமரசம் 16-31 மார்ச், 2025, பக்கம் 12இல் வெளியான மும்மொழிக் கொள்கை கட்டுரை முழுமையானதாகவும் சிறப்பானதாகவும் இருந்தது. பள்ளிப் பருவத்திலேயே இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவன் என்பதாலும், அரசு உதவியினால் கல்வியையும் வாழ்வையும் பெற்றவர்களில் ஒருவன் என்பதாலும், அந்தக் கட்டுரையைப் படித்ததும் எனக்குத் தோன்றிய சில கருத்துகளை சமரசம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.**

இன்று நம் தலையாயப் பிரச்னைகளில் மிக முக்கியமானதாக இருப்பவை குறைவான வருமானமும் ஏழ்மையும் தான். உலகிலேயே அதிக ஏழைகள், யாசகர்கள், வீடில்லாதோர், பொது வெளிகளில் மலம் கழிப்போர் வாழும் இடமாக நம் நாடு உள்ளது. மறுபுறம் இளைஞர்கள் சந்திக்கும் சவால்களோ ஏராளம். பல்கலைக்கழகப் பட்டங்கள் பெற்றுவிட்டு, சரியான வேலை கிடைக்காமல் அலைபவர்களின் எண்ணிக்கை உலகிலேயே நம் நாட்டில்தான் அதிகம். இளைஞர்களிடம் வன்முறைகள், தற்கொலைகள், நம்பிக்கை இன்மை போன்ற பிரச்னைகள் அதிகரித்து வருகின்றன (The New Indian Express, India's Youth Need Invictus Moment, 3.4.2025, p.06). இதுபோன்று நாடு சந்திக்கின்ற முதன்மைப் பிரச்னைகள் இருக்கின்ற இந்தப் பின்னணியில், முதலில் மொழி தொடர்பான சில செய்திகளைத் தெரிய வேண்டி உள்ளது.

மொழியின் அவசியத்தை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. நிறைய மொழிகள் தெரிந்தால் நல்லதுதான். முடிந்தவர்கள், தேவை என நினைப்பவர்கள், வசதியும் ஆர்வமும் கொண்டவர்கள், அவர்கள் விருப்பப்படி எத்தனை மொழிகள் வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளட்டும். அதற்கான வசதிகள் இன்றும் போதுமான அளவில் இருக்கிறது. கூகுள் உதவியுடனே பல மொழிகள் கற்றுக்கொண்ட மாணவர்களை நான் அறிவேன். அன்று முதல் இன்று வரை, பணியின் நிமித்தம் தமிழ் நாட்டை விட்டு வெளி மாநிலங்கள் சென்றவர்களும், பிற மாநிலங்களில் இருந்து தமிழ்நாடு வந்தவர்களும் தாங்களே தமக்கு வேண்டிய மொழிகளைக் கற்றனர்; கற்கின்றனர்; வெற்றிகரமாகச் செயல்படவும் செய்கின்றனர்.




சமரசம் கட்டுரையை மறுபிரசுரம் செய்த விடுதலை நாளிதழ்

தமிழ்நாட்டில் பன்மொழி வித்தகர்கள் எத்தனையோ பேர் அன்றும் (வேலு நாச்சியார், இராணி மங்கம்மாள், பாரதியார்) இருந்தனர்; இன்றும் இருக்கின்றனர். அதற்குக் காரணம் திணிப்பு அல்ல; தேவையும், ஆர்வமும், வசதி


யும்தான். தமிழுக்குத் தொண்டு செய்த ஜி.யு.போப், வீரமாமுனிவர், உமறுப்புலவர் போன்றவர்களை யார் கட்டாயப்படுத்தியது?

இரண்டாவதாக, மொழிப் பயிற்சி பெற்று எழுதவும், பேசவும், காவியங்கள் படைக்கவும் விரும்புபவர்கள் மிகச் சிலராகவே இருப் பார்கள்; அவர்கள் பிரத்தியேக பயற்சி எடுத் தாக வேண்டும்; அவர்களுக்காக, தமிழகத்தில் உள்ள சுமார் 37,260 (இந்தியாவில் சுமார் 10,22,000) அரசு, அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளிலும் பல மொழிகளையும் பயிற்று விக்கத் தேவையில்லை. அதற்குப் போது மான நிதி ஆதாரம் அரசிடம் இருக்கிறதா? ஒரு பள்ளிக்கு ஒரு மொழிக்கு ஒரு ஆசிரியர் என மூன்று மொழிகளுக்கு இந்தியாவில் 30,66,000 ஆசிரியர்கள் தேவைப்படு வார்கள்; மாதச் சம்பளம் ஒருவருக்குக் குறைந்தது ரூ.20,000 என்று வைத்தால்கூட, மாதம் ஒன்றுக்கு ரூ.6,132 கோடியும், ஆண்டு ஒன்றுக்கு ரூ.73,284 கோடியும் தேவைப் படும். (இது ஏறத்தாழ மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட தொகைக்குச் சமம் ஆகும்)

அவரவர் தேவைக்கு அவரவரே கற்றுக் கொள்வதற்கு, அரசு இவ்வளவு பணம் செலவு செய்ய வேண்டுமா? இப்போது உள்ளதற்கே போதுமான ஆசிரியர்கள் இல்லை, வகுப் பறைகள் இல்லை, கழிப்பறைகள் இல்லை, தண்ணீர் இல்லை.

நீண்ட காலமாக (1964இல் இருந்து) சொல்லப்பட்டு வரும் கோத்தாரி குழுவின் பரிந்துரையான ‘தேசிய உற்பத்தியில் ஆறு விழுக்காட்டு நிதியைக் கல்விக்கு வழங்க’ இயலவில்லை; இன்னும் அதில் பாதிகூட வழங்கப்படவில்லை. ஏகப்பட்ட கடன்கள் வேறு; வட்டி கட்டுவதற்கே ஆண்டுக்கு சுமார் பத்து இலட்சம் கோடி ரூபாய் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது. பல துறைகளுக்குப் போதுமான நிதி ஒதுக்க இயலவில்லை. நாடு விடுதலை பெறும்போது, நம்மை விடப் பின்தங்கி இருந்த நாடுகள் கூட இன்று தலைவீத வருவாயிலும், கல்வியிலும், ஆராய்ச்சியிலும், அறிவுசார் சொத்துரிமைகளிலும் எவ்வளவோ உயர்ந்து விட்டன; இந்த நிலையில், தேவையான திறன் வளர்க்கும் வழிகளைப் பற்றி ஆராயா மல், மொழிகளைப் பற்றியே பேசுவது சரியா?

பல மொழிகளைக் கட்டாயமாக்கி, மாணவர்கள் மீது திணித்தால், மாணவர் களுக்கு அதிகச் சுமையாகிவிடும் அல்லவா? தேர்வுகளில் தோல்வியுற்று கல்வி இடை நிற்றல் அதிகமாகிவிடும் அல்லவா? (வட மாநிலங்களில் இந்த நிலை காணப்படுகிறது) ஏற்கனவே சமூக, பொருளாதார நிலையில் பின்தங்கிய விளிம்பு நிலை மாணவர்களுக்குப் பள்ளிக் கல்வியை இலவசமாக வழங்கியும், கல்லூரிக் கல்விக்குக் கணிசமான கல்வி உதவித்தொகை வழங்கியும், இயலாமையால் படிப்பை விட்டுவிட்டு, ஏதோ ஒரு வேலை யைத் தேடிப் போய்விடுகிறார்கள். அனைத் திந்திய உயர்கல்வி ஆய்வறிக்கை தரும் புள்ளி விவரங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன.




மொழிப் புலமையைக் கொண்டு கவிதைகள், கட்டுரைகள் படைக்கலாம்; சீரிய உரைகள் ஆற்றலாம். அவை யாவும் முக்கியமே. ஆனாலும், பிற திறன்கள் இல்லாமல் மொழிப் புலமையை மட்டும் கொண்டே அனைவரும் வாழ்ந்துவிட முடியாது. நம் அன்றாட வாழ்வுக்கு எத்தனையோ பண்டங்கள், பணிகள், திறன்கள் தேவைப்படுவதை நாம் அறிவோம். இன்று இந்தி பேசுபவர் களை விட அதிகம் சம்பாதிப்ப

வர்கள் ஆங்கிலம் அறிந்தவர்களாக இருக்கிறார்கள். இது இப்படி இருக்கும்போது, இன்னும் பல வட மாநிலங்களில் இந்தி, சமஸ்கிருதத்தைத் தவிர, பிற மொழிகளை முழுமையாகக் கற்றுக்கொடுப்பது இல்லை; பலருக்கு அவர்களின் தாய்மொழிகூட என்னவென்றே தெரியாத அளவிற்கு, இந்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆங்கிலமும் சரிவர கற்றுக் கொடுக்கப்படுவது இல்லை.

அண்மைக்கால புள்ளிவிவரங்களின்படி, உதாரணத்திற்கு பீகாரில் இந்தியும் சமஸ்கிருதமும் முறையே 99, 56 விழுக்காடு பள்ளிகளில் பயிற்றுவிக்கப்படுகின்றன. ஆனால், மற்ற மொழிகள் வெறும் 07 விழுக்காடு பள்ளிகளில் மட்டும்தான் பயிற்றுவிக்கப்படுகின்றன. ஹிமாச்சலப் பிரதேசத்தில், அனுமதி அளிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை பஞ்சாபி மொழிக்கு 100; சமஸ்கிருதத்துக்கு 5,078 (Maitri Porecha, Third language choice: Hindi in non Hindi States, Sanskrit in Hindi belt, The Hindu, 3.4.2005, p.07). மற்ற மொழிகளுக்கு மிகச் சொற்பமே. பிற வட மாநிலங்களிலும் இதே நிலைதான். வட கிழக்கு, தென் மாநிலங்களில் மட்டும்தான் சமஸ்கிருதம், இந்தி அல்லாத பிற மொழிகளும், ஆங்கிலமும், படிக்க அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன.

அடுத்ததாக உயர் கல்வியில் அறிவியல், வணிக, தொழில் நுட்ப, மருத்துவப் பாடங்கள் படிக்கும் அளவிற்கு, எந்த இந்திய மொழியிலும் இன்னும் புத்தகங்கள் வரவில்லை; ஐரோப்பிய நாடுகளிலும் ஜப்பானிலும் நிலைமை வேறு. அவர்களோடு ஒப்பிடுவது சரியல்ல. அங்கே, ஆங்கிலத்திற்கு நிகராக அவர்களின் தாய் மொழிகளிலும் புத்தகங்கள் போதுமான அளவிற்கு இருக்கின்றன, கிடைக்கின்றன. இந்தியாவிலும் அதுபோலச் செய்ய வேண்டியுள்ளது. அதனைச் செய்ய மொழி அறிவோடு, பாட அறிவும் வேண்டி உள்ளது. உதாரணத்திற்கு, மொழிஅறிவோடு மருத்துவம், அறிவியல், வணிகம், தொழில் நுட்பம் பற்றிய அறிவு இருந்தால்தான், உயர்கல்விக்குப் பொருத்தமான நூற்களை இந்திய மொழிகளில் எழுதவோ, மொழி பெயர்ப்பு செய்யவோ முடியும். அதற்கான ஏற்பாடுகள் இன்னும் போதுமான அளவிற்குச் செய்யப்பட வேண்டி உள்ளது.

இந்திக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கின்ற மாநிலங்கள் நீண்ட காலமாகப் பொருளாதாரத்தில், தலைவீத வருவாயில், வசதி வாய்ப்புக்களில் பின் தங்கியே உள்ளன. இந்தியை மட்டும் அறிந்தவர்கள் போதுமான வேலை கிடைக்காமல் தென் மாநிலங்களை நோக்கிக் குடும்பத்தோடு படையெடுக்கும் நிலையை நாம் பார்க்கிறோம். அங்கே Annual Status of Education Report (ASER) Survey தரும் புள்ளிவிவரங்களின்படிப் பார்த்தால், தேவையான அளவுக்குப் பள்ளிகள் இல்லை; வகுப்பறைகள் இல்லை; பள்ளிகளில் பாடம் நடத்த ஆசிரியர்கள் இல்லை; (பார்க்க: Suman Bhattacharjea, NEP 2020 in the classroom, from policy to practice, The Hindu, 1.4.2025, p.6.).

இருக்கின்ற ஆசிரியர்களுக்கும் ஊதியம் வழங்க இயலவில்லை; கழிவறைகள் இல்லை; இருக்கும் சில கழிவறைகளில் தண்ணீர் இல்லை; சாலைப் போக்குவரத்து, மருத்துவ வசதிகள் இல்லை; தமிழ்நாட்டில் உள்ள அளவுக்குப் பொறியியல், மருத்துவக் கல்லூரிகள் அங்கே இல்லை; திட்டங்கள் சரியாகச் செயல்படுத்தப்படுவது இல்லை. அந்தப் பின்தங்கிய மாநிலங்கள் முன்னேற, வளர்ந்து வரும் மாநிலங்களைப் பார்த்துச்

**உள்ள பாடங்களையே நடத்த முடியாமல்**
**ஒரு பக்கம் ஆசிரியர்கள் திணறல்; மறுபக்கம்,**
**படிக்க முடியாமல் மாணவர்கள் திணறல்; இடைநிற்றல்;**
**வேலைக்குச் சென்றால் குறைவான கூலி.**
**இந்த நிலையில் இதைப்படி,**
**அதைப்படி என்று கட்டாயப்படுத்தினால்,**
**வசதியில்லாத, முடியாத மாணவர்கள்**
**பள்ளிக்கூடங்களுக்கே வரமாட்டார்கள்.**

செயல்பட வேண்டும். அதை விட்டுவிட்டு, ஒன்றிய அரசு எவ்வளவோ உதவியும், விழலுக்கு இறைத்த நீராக, நீண்ட காலமாக வளராத மாநிலங்களில் உள்ள நிலையை அனைத்து மாநிலங்களிலும் திணிக்க நினைப்பது எவ்விதத்தில் மக்களுக்கு உகந்த தாக, நியாயமானதாக இருக்க முடியும்?

உலகின் பெரிய செல்வந்தர்களில் பலரை இந்தியாவில் காண முடிகிறது. ஆனால், உலகின் தலைசிறந்த கல்வி நிலையங்களில், பல்கலைக்கழகங்களில் எத்தனை இந்தியாவில் உள்ளன? சிறந்த கல்வி நிலையங்களைப் பார்த்து, நாமும் மாணவர்களுக்கு ஏகப்பட்ட வாய்ப்புகளை வழங்க வேண்டும்; பலநூறு வகையான பாடத்திட்டங்கள் மாணவர் களுக்கு வழங்கப்பட வேண்டும்; அவற்றில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்துப் படிக்க, மாண வர்களுக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டும்; அவற்றைப் பயிற்றுவிக்க ஏராளமான, சரி யான, ஆசிரியர்களைப் போதுமான அளவு நியமிக்க வேண்டும். இவற்றையெல்லாம் விட்டுவிட்டு, மொழி பற்றிய குறுகிய கண் ணோட்டத்தையே கொண்டு கொள்கைகள் வகுக்கப்பட்டால், எப்படி இந்தியக் கல்வி முறை சிறந்ததாக இருக்கும்? எத்தனை ஆண்டுகளுக்குத்தான் தக்சசீலாவையும் நாளந்தாவையும் சொல்லி புகழ் பாடிக் கொண்டு இருக்க முடியும்?

விரும்புகிற மாணவர்களுக்கு, விரும்புகிற பாடங்களைப் பயிற்றுவிக்க வழி செய்யாமல், தத்தித்தத்தி முன்னேறத் துடிக்கும் ஏழை மாணவர்கள் தலையில் ஏராளமான சுமையை ஏற்றுவது, குருவியின் தலையில் பனம்பழத்தைத் தூக்கி வைப்பது போல் ஆகும். ஏகப்பட்ட விடுமுறைகளாலும், இடம், ஆசிரியர்கள் பற்றாக்குறையாலும், கல்வியல்லாத பணிச்சுமையாலும், உள்ள பாடங்களையே நடத்த முடியாமல் ஒரு பக்கம் ஆசிரியர்கள் திணறல்; மறுபக்கம், படிக்க முடியாமல் மாணவர்கள் திணறல்; இடைநிற்றல்; வேலைக்குச் சென்றால் குறை வான கூலி. இந்த நிலையில் இதைப்படி, அதைப்படி என்று கட்டாயப்படுத்தினால், வசதியில்லாத, முடியாத மாணவர்கள் பள்ளிக் கூடங்களுக்கே வரமாட்டார்கள்; வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சலாமா? தாழ்ந்த, பின்தங்கிய சமூகப் பொருளாதாரப் பின்புலத் தைக் கொண்டவர்களைப் பயமுறுத்தி, பள்ளியை விட்டே ஓடிவிட வைக்கலாமா?

அவர்களுக்கு எப்போது எது தேவை என நினைக்கிறார்களோ அப்போது அவர்கள் அதை நிச்சயம் கற்றுக்கொள்வார்கள். அதைப் பற்றிய கவலை அரசுக்கு வேண்டியதில்லை. அரசு கவனிக்க வேண்டிய மிக அவசரமான, அவசியமான வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன. முன்பு இருந்த மன்னர்கள், மக்களைக் கட்டாயப்படுத்தி ஏதேதோ செய்ததாக இன்று நம்மை ஆள்பவர்கள் கூறி வருகின்றனர். அவற்றில் எவ்வளவு உண்மை, எவ்வளவு கட்டுக்கதை என்று அந்த ஆண்ட வனுக்குத்தான் தெரியும். அப்படியே இருந் தாலும், அந்த வழியை இன்று அறிவில் சிறந்து விளங்குவதாகக் கூறிக்கொள்பவர்கள், பின்பற்றுவது நியாயமாகுமா?

இன்று, பெரும்பாலான மக்களுக்கு எது சரி, எது தவறு, எது தேவை, எது தேவை யில்லை என்று தெரியும். எனவே, அதிகாரத் தில் உள்ளவர்கள் நினைப்பதை, மக்கள் விருப்பத்திற்கு விட்டுவிட வேண்டும். எதை யும் மக்கள் விரும்பும் வண்ணம் செய்தால், அதனை மக்கள் நிச்சயம் ஏற்றுக்கொள்வார்கள்; திறம்படவும் செய்வார்கள். எனவே, மக்க ளுக்கு எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது என்று கட்டளை இடுவதைத் தவிர்த்து, அதற்குத் தேவையான வசதிகளை முதலில் செய்து கொடுக்க வேண்டும்.

இரண்டாவதாக, அதனைச் செய்வதால் மக்களுக்கு நல்ல பலன் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். தேவையும், வசதியும், பலனும் இருந்தால், மக்கள் எதையும் ஆர்வத்தோடு ஏற்றுக்கொள்வார்கள். மொழி, மதம், சாதி, மாநிலம் ஆகியவற்றை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, மக்களைக் கூறு போட்டு வெற்றி காண நினைப்பது, நீண்ட கால வளர்ச்சிக்குச் சரியாக இருக்காது.



# நலிவுறும் கல்வி

– முஹம்மது யஹ்யா பாஷா
மாநிலத் தலைவர், இந்திய மாணவர் இஸ்லாமிய அமைப்பு (SIO)

ஒரு நாடு காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை அடைந்த வரலாற்றை எடுத்துப் பார்த்தால் நாட்டைக் கட்டமைக்க எடுத்த முயற்சியும், தீவிரக் கவனமும் மிக முக்கிய மானது. அப்படியான வரலாறு இந்தியா வுக்கும் உண்டு.

விடுதலையடைந்த இந்தியாவின் மிகப் பெரும் சவால் இந்தியாவை முன்னேற்றப் பாதையை நோக்கிச் செலுத்துவது மட்டும் இல்லை. மாறாக மாகாணங்களாகப் பிரிந்து கிடந்த நிலங்களையும், மக்களையும் ஒன்று படுத்தி அவர்களுக்குள் இந்தியர் என்ற ஒற்றுமையையும் வளர்ந்தோங்கச் செய்ய வேண்டி இருந்தது. அதற்காக அன்றைய முஸ்லிம் லீக், காங்கிரஸ் போன்ற அமைப்புகள் நாடு தழுவிய பரப்புரைகளைப் போல் பணி செய்து ஒற்றுமையை வளர்ந் தோங்கச் செய்தனர். அதேசமயம் மக்களுக்குக் கல்வி தலையாயக் கடமை என்பதைப் புரிய வைக்கப் பாடுப்பட்டனர்.

இச்சமயத்தில் தான் இந்திய விடுதலை இயக்கத்தின் மூத்த அரசியல் தலைவரும், இந்திய முஸ்லிம் அறிஞரும், இந்தியப் பிரிவினையை எதிர்த்து இந்து - முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்திய முஸ்லிம் தலைவர்களில் முதன்மையானவருமான மௌலானா அபுல் கலாம் ஆசாத் விடுதலை இந்தியாவின் முதல் கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

இந்திய மக்களின் ஒற்றுமைக்காகவும், அறிவு வளர்ச்சிக்காகவும் தேசிய அளவில் ஒருங்கிணைந்த கல்வி முறையை உருவாக்க ஆசாத் பாடுபட்டார். நாட்டில் உள்ள மக்களின் ஏற்றத் தாழ்வுகளை உணர்ந்து பொருளா தாரத்தில் பின்தங்கி இருக்கும் மக்கள் அனை வருக்கும் இலவச ஆரம்பக் கல்வி கிடைக் கவும் வழி செய்தார். அன்றே நவீன கல்வி முறைக்கும் வித்திட்டவர் ஆசாத் தான்.

இன்று உலகம் முழுவதும் பல்வேறு துறைகளில் இந்திய IIT மாணவர்கள் சாதனை புரிவதற்கு முதற் காரணமே ஆசாத் நிறுவிய இந்திய தொழில்நுட்பக் கழகங்கள் தான். மட்டுமின்றி இந்தியாவில் பல்கலைக்கழக மானியக் குழு அமை வதற்கும் அவர் பாடுபட்டார்.

இப்படி ஒவ்வொரு துறைகளிலும் இந்தியா வளர்ச்சிப் பாதையை நோக்கி பயணித்து வந்தது வரலாற்றுச் சாதனை. ஆனால் இன்றைய இந்தியாவை 2014க்கு முன், 2014க்கு பின் என்று ஆய்வு செய்யும் சூழல் ஏற்பட்டுள்ளது. பாஜக ஆட்சி பொறுப்

பேற்றதில் இருந்து இந்தியாவில் பிரிவினை வாதப் பேச்சு, கல்வியில் பின்தங்கிய நிலை, நவீன கல்வியில் கவனம் செலுத்தாமை என அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஒரு நாட்டின் கல்வி முறை அதன் தரத்தில் பின்தங்குவது அல்லது வளர்ச்சி இல்லாமல் இருப்பது போன்ற நிலை அங்கு வாழும் மக்களின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கிறது. நலிவுற்றுக் காணப்படும் நாட்டின் கல்வி நிலை பல காரணங்களால் நிகழலாம், உதாரண மாக, போதிய நிதி இல்லாமை, நல்ல ஆசிரி யர்கள் இல்லாதது, நவீன கல்வி முறைகள் இன்மை, மாணவர்களின் ஆர்வமின்மை போன்றவை. இதில் மாணவர்களுக்குக் கல்வி ஆர்வம் இல்லாமல் போவதற்கும் அரசே முக்கிய காரணம். ஏனெனில், எப்படி ஒரு நாடு வகுக்கும் வருமான வரிகள் வணிகத்தில், தனிநபர் வருமானத்தில் தாக்கத்தை ஏற்படுத்து கிறதோ அதைவிடப் பெரும் பாதிப்பு கல்வி யிலே அசட்டையாக இருப்பது ஆகும்.

ஒரு நாட்டின் கல்வி முறையின் தரம், மாணவர்களின் அறிவை வளர்ப்பதற்கும், அவர்கள் வாழ்க்கையில் முன்னேறத் தேவை யான திறன்களைப் பெறுவதற்கும் முக்கிய மானது. நலிவுற்று வரும் கல்வி முறை மாணவர்களின் திறமைகளை வளர்ப்பதில் தோல்வியடையும், மேலும் அவர்களது எதிர் காலத்தைப் பாதிக்கும்.

நவீன கல்வி முறைகள் இல்லாதது, மாணவர்கள் உலகின் தேவைகளுக்கு ஏற்ப தயாராகாமல் போகலாம். தொழில்நுட்பம், மற்ற நவீன கல்வி முறைகளைப் பயன்படுத் தாத கல்வி நிறுவனங்கள் மாணவர்களுக்கான சரியான கல்வியை வழங்க முடியாது.

இன்று பாஜக ஆட்சியில் கல்வி முறையில் மறுசீரமைப்பு என்ற பெயரில் வேத காலத் திற்கு நம்மை அழைத்துச் செல்ல முயல் கிறார்கள். இது இந்தியாவின் மதச்சார்பற்ற ஜனநாயக நற்சான்றிதழ்களை அழிக்க வல்லது. காவிமயமாக்கல், தனியார்மயமாக்கல், எதேச் சதிகாரம் ஆகிய மூன்று கொள்கைகள் பாஜகவின் கல்விக் கொள்கையாய் உள்ளன.

காவிமயமாக்கல் அல்லது பாடத்திட்ட மாற்றம், நிறுவன மறுசீரமைப்பு மூலம் இந்து தேசியவாத வடிவத்தில் கல்வியை மறுசீரமைத்தல், வரலாற்று ரீதியாக பாஜ கவின் தாய் அமைப்பான ராஷ்ட்ரிய சுயம் சேவக் சங்கத்தின் (RSS) முக்கிய நிகழ்ச்சி நிரலாக இருந்து வருகிறது.

2020ஆம் ஆண்டு பாஜக அரசாங் கத்தால் நாடாளுமன்றத்தில் எந்த விவாத மும் இல்லாமல் வெளியிடப்பட்ட தேசிய கல்விக் கொள்கை, கல்வியை காவிமய மாக்குவதற்கான ஒரு விரிவான செய்முறை யாகும். காவிமயமாக்கல் பிராமண ஸ்டீரியோ டைப்களை வலுப்படுத்தவும், எதேச் சதிகாரத்தை வலிமையாக்கவும், இந்தியாவின் முஸ்லிம் ஆட்சியாளர்களை அரக்கர்களாக சித்திரிக்கவும், வரலாற்று ரீதியாக உறுதிப் படுத்தப்பட்ட ஆரிய குடியேற்றக் கோட் பாட்டை மறுக்கவும், வகுப்புவாத துருவ முனைப்பை ஊக்குவிக்கவும் முனைகிறது.

ராஜஸ்தானில் உள்ள பாஜக அரசு 2016ஆம் ஆண்டு புதிய பள்ளி பாடப் புத்தகங்களை அறிமுகப்படுத்தியது. அதில் அறிவியல் பாடப் புத்தகங்கள் புராண நூல்களை அடிப்படையாகக் கொண்டவை. இலக்கியம், சமூக அறிவியல் பாடப் புத்தகங்கள் சாதி அமைப்பின் தீமைகளை மூடி மறைக்கின்றன. இந்தப் பாடப் புத்தகங்கள் பெரும்பாலும் சாதி, பாலின ஸ்டீரியோ டைப்களை வலுப்படுத்துகின்றன, தேச பக்தியை ஆயுதப்படைகளுக்கான மரியாதை யுடன் இணைக்கின்றன. முக்கிய வரலாற்று நிகழ்வுகளைத் திரிக்கின்றன.

இவர்கள் போதிக்கும் பிரிவினைவாத அரசியல் மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும், மதச்சார்பின்மையை அடியோடு அழிக்கும்.

கல்வி ஒரு நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஒரு முக்கிய காரணி என்பதால், கல்வி முறையை மேம்படுத்துவது அவசியம். அதில் அரசின் கவனக்குறைவு நாட்டின் கல்வி நிலையை நலிவுறச் செய்யும்.


Face Neet with Smiling Face !
JAL NEET ACADEMY
CREATING FUTURE MEDICOS
JNA
Kerala NEET Expert Faculties
Specially Designed Materials
Support from Subject Experts
Frequent Evaluation Tests
After Test Analysis
Guided Group Study
Individual Assessment by JAL
Regular Parental Interaction
Motivation from Current Medicos
Brain Boosting Activities
Well Maintained Hostel
Hygienic & Homely Food
Mind Power & Healing Activities
Schedule Book for Time Management
Namaz Friendly Atmosphere
Registration Started !
YouTube
anbodu JAL
NEET 2025 CRASH
30 Days Intensive Coaching just after +2 Board Exam
NEET 2026 REPEATERS
1 Year Long Term Coaching Program
TIRUNELVELI
KADAYANALLUR
NAGERCOIL
8608 28 8608
8608 29 8608
8608 19 8608
The only Institute Following Mind Power Techniques !
JALAL AHMAD (JAL)
(Mind Trainer)
Founder & CEO

படிப்பது சுகமே ! கற்பது நலமே !

# RDB கல்வி நிறுவனங்கள்

RDB Educational & Charitable Trust

AIM HIGH AIM FAR

ISO 9001 : 2000 உலகத் தரச் சான்று பெற்ற கல்லூரி.
எண்:4, சாலியமங்கலம் ரோடு, பாபநாசம் - 614 205. தஞ்சாவூர் மாவட்டம்.

## ADMISSIONS OPEN

### RAJAGIRI DAWOOD BATCHA COLLEGE OF ARTS AND SCIENCE

Recognized by UGC under Section 2(f) & 12(B) | Affiliated to Bharathidasan University, Tiruchirappalli

**UG COURSES**

B.Lit. Tamil | B.A. English
B.B.A., | B.Com., | B.Com., (Commerce)
B.Com., (Computer Application)
B.Com., (Bank Management)
B.C.A., (Computer Application)
B.Sc., (Artificial Intelligence)
B.Sc., (Information Technology)
B.Sc., (Bio-Technology)
B.Sc., (Mathematics)
B.Sc., (Visual Communication)
B.Sc. Mathematics / Physics / Biotechnology
B.Sc. Biochemistry / Microbiology
B.Sc. Visual Communication
B.Sc. Hotel Management & Catering Science
B.Sc. Fashion Technology & Design *
B.Sc. Nutrition and Dietetics *
B.Sc. Psychology *
B.A. Islamic studies *

**PG COURSES**

M.B.A., (Hospital Management)
M.B.A., (General)
M.Com., (Commerce)
M.Sc., (Computer Science)
M.Sc. Information Technology

**RESEARCH COURSE**

M.Phil., (Computer Science)
M.Phil., (Commerce)
M.Phil., (Management)
Ph.D., (Management)
Ph.D., (Commerce)

### RDB MATRICULATION HIGHER SECONDARY SCHOOL

(Approved by Department of School Education, Govt. of Tamil nadu Approval No : 5353A.1/2.20)

**LKG to XII Std**

+1 COURSES OFFERED

1. Maths - Physics - Chemistry - Biology
2. Maths - Physics - Chemistry - Computer Science
3. Physics - Chemistry - Botany - Zoology
4. Physics - Chemistry - Biology - Computer Science
5. Economics - Commerce - Accountancy - Computer Application
6. Economics - Commerce - Accountancy - History
7. Economics - Commerce - Accountancy - Business Maths

### RDB COLLEGE OF EDUCATION

(Affiliated to Tamil Nadu Teachers Education University, Chennai) Accredited by NAAC with "B" Grade

- B.Ed. (2 Year Programme)
- M.Ed. (2 Year Programme)

### RDB INSTITUTE OF MANAGEMENT

(Approved by AICTE, Affiliated to Bharathidasan University)

- M.B.A. (HR, Finance, Operation, Systems, Marketing)
- M.B.A. (Hospital Management)

**RESEARCH COURSE**

- M.Phil., Management
- Ph.D., Management

### RDB SCHOOL OF NURSING & PARAMEDICAL SCIENCE (ANM)

(Approved By Tamil Nadu Nursing Council Health and Family Welfare)

- Diploma in Auxiliary Nurses and Midwives (ANM)
(2 Year Diploma Programme)

### RDB COLLEGE OF NURSING AND PARAMEDICAL SCIENCE

**OPENING SOON**

*All Muslim Parents are Requested to Support us in Admissions*

**HOSTEL AVAILABLE FOR GIRL STUDENTS**

**63809 80363 / 04374-222123**

admissions@rdbcas.edu.in




# வக்ஃப் திருத்தச் சட்டம்: இனி நாம் செய்ய வேண்டியது என்ன?

- வி.எஸ்.முஹம்மத் அமீன்

### 1. சட்டப் போராட்டம் தொடர வேண்டும்

வக்ஃப் திருத்தச் சட்டத்தை எதிர்த்து அரசியல் கட்சிகள், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உள்ளிட்ட அமைப்புகள், அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியம், APCR உள்ளிட்ட 73 மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா, சஞ்சய் குமார், கே.வி.விஸ்வநாதன் அடங்கிய அமர்வு ஏப்ரல் 16ஆம் நாள் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டதுடன் ஒன்றிய அரசுக்குப் பல வினாக்களை எழுப்பி இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்தது.

பயன்பாட்டின் அடிப்படையிலான வக்ஃப் (waqf by user) சொத்துகள், இனி வக்ஃபாக அங்கீகரிக்கப்படாதா? பல நூற்றாண்டாகப் பயன்பாட்டின் படி வக்ஃபாக(waqf by user) உள்ளவற்றைப் பதிவு செய்ய வேண்டுமா? சச்சரவு உள்ள பகுதிகளில் அரசு அங்கீகாரம் பெற்ற அதிகாரி விசாரணையை முடிக்கும் வரை அவை வக்ஃப் சொத்து அல்ல எனக் கூறுவது நியாயமா? வக்ஃப் என நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டதை பிரிவு 2A எப்படி மீற முடியும்? புதிய திருத்தங்களுக்குப் பிறகும் மத்திய வக்ஃப் கவுன்சில் மாநில வக்ஃப் வாரியங்களில் பெரும்பாலான உறுப்பினர்கள் முஸ்லிம்களாக இருப்பார்களா? வக்ஃப் வாரியங்களில் இந்துக்கள் இடம் பெறுவது போல், இந்து அறக்கட்டளைகளில் இஸ்லாமியர்கள் இடம்பெற முடியுமா? போன்ற அடுக்கடுக்கான கேள்விகளை நீதிபதிகள் எழுப்பினர்.

'நீண்ட காலத்துக்கு முன்பே வக்ஃப் சொத்துகளாக இருப்பவை ரத்து செய்யப் படுவதற்கான வாய்ப்பு இத்திருத்தச் சட்டத் தில் இருக்கின்றது. திருத்தங்கள் வாயிலாக வரலாற்றை மாற்றி எழுத முடியாது. நீண்ட காலத்துக்கு முன்பே வக்ஃப் சொத்துகளாக உள்ளதை அரசு எப்படிப் பதிவு செய்யும், அவர்களிடம் என்ன ஆவணங்கள் இருக்கும்? (வக்ஃப் சட்டம்) தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம், ஆனால் நியாயமானவையும் உள்ளன' என தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா கூறினார்.

நீதிபதி சஞ்சய் குமார், 'திருப்பதி கோயில் நிர்வாகக் குழுவில் இந்துக்கள் இல்லை எனக் கூற முடியுமா?' என சொலிசிட்டர் ஜெனரலுக்குக் கேள்வி எழுப்பினார்.

இதனைத் தொடர்ந்து மூன்று முக்கிய நிபந்தனைகளை விதித்து இடைக்காலத் தடையை நீதிமன்றம் முன்வைத்து நாளை மதியம் மீண்டும் விசாரணை நடைபெறும் என்று கூறியது.

1. நீதிமன்றத்தால் வக்ஃப் என உத்தர விடப்பட்ட சொத்துகளை ரத்து செய்யக் கூடாது, அது பயன்பாட்டின் அடிப்படை

யிலான வக்ஃப் (waqf by user) ஆக இருந்தாலும் சரி, ஒப்பந்தத்தின் அடிப்படையிலான வக்ஃப் (waqf by deed) ஆக இருந்தாலும் சரி.

2. மாவட்ட ஆட்சியர் விசாரணை நடத்தும் காலகட்டத்தில் குறிப்பிட்ட பகுதி வக்ஃப் சொத்தாகக் கருதப்படாது என்ற திருத்தச் சட்டத்தின் பிரிவு நடைமுறைக்கு வராது.

3. மத்திய வக்ஃப் கவுன்சில், மாநில வக்ஃப் வாரியங்களின் அனைத்து உறுப்பினர்களும் முஸ்லிம்களாக இருக்க வேண்டும், (அலுவல் ரீதியான உறுப்பினர்களைத் தவிர)

மீண்டும் ஏப்ரல் 17ஆம் நாள் நடந்த விவாதத்தில் அரசின் வாதங்களைக் கேட்ட நீதிபதிகள் 'சட்டத்தில் சில நேர்மறையான விஷயங்கள் இருப்பதை நாங்களும் ஒப்புக் கொள்கிறோம். அதேபோல் சட்டத்தை நிறுத்தி வைக்கக் கூடாது என்று சொல்வதும் சரிதான், எல்லா நேரத்திலும் சட்டங்களை நீதிமன்றங்கள் நிறுத்தி வைப்பதில்லை' என்று கூறினர். அதேசமயம் எதிர்த் தரப்பு மனுதாரர்கள் 73 பேரில் 5 மனுதாரர்களை மட்டுமே ஏற்றுக் கொள்ள முடியும். மற்றவர்களின் மனுக்கள் தள்ளுபடி செய்யப் பட்டவையாகக் கருதப்படும் என்றும் கூறியுள்ளனர்.

மீண்டும் இவ்வழக்கு விசாரணை தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இச்சூழலில் தொடர்ந்து சட்டப் போராட்டத்தை முன்னெடுத்து அதில் வெற்றி பெற வேண்டும். அது நம் முன் இருக்கும் மிக முக்கியமான முதன்மைப் பணியாகும்.

### 2. மக்கள் போராட்டம் வீரியமடைய வேண்டும்

வக்ஃப் திருத்தச் சட்டத்தை ஒன்றிய அரசு திரும்பப் பெறும் வரையில் மக்கள் போராட்டம் தொடர வேண்டும். தொடக்கத்தில் சூடுபிடிக்கும் போராட்டம் நாளடைவில் தளர்ந்து விடக்கூடாது. நீதிமன்றத்தின் இடைக் கால உத்தரவு நமக்கு நம்பிக்கையைத் தந்தாலும் அது உளவியல் ரீதியில் போராட்ட வீரியத்தைக் குறைத்து விடும். அதையும் தாண்டி நாம் போராட வேண்டும்.

வெறுமனே ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் என்றில்லாமல் கருத்தரங்கங்கள், ஊடக விவாதங்கள் போன்ற பல்வேறு வழிமுறைகளையும் கையாள வேண்டும். முஸ்லிம் தனியார் சட்ட வாரியம் ஏப்ரல் 30 ஆம் நாள் இரவு 9 மணிக்கு 15 நிமிடம் விளக்கை அணைக்கும் நாடு தழுவிய போராட்டத்தை நடத்தியது. இது போன்ற கவனத்தை ஈர்க்கும் அறவழிப் போராட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

### 3. சகோதரச் சமுதாயச் சொந்தங்களும் போராட வேண்டும்

சகோதரச் சமுதாயச் சொந்தங்களை ஒருங்கிணைத்துப் போராட வேண்டும். முஸ்லிம்கள் பாதிக்கப்படும்போது முஸ்லிம்கள்தான் போராட வேண்டும் என்ற நிலை மாற வேண்டும். நம் பக்கம் இருக்கும் நீதியைப் புரிந்து கொண்டு போராடத் தயாராக இருக்கும் சகோதரச் சமுதாயச் சொந்தங்களைக் களத்திற்கு அழைத்து வர வேண்டும்.

பேச்சாளர்களாக சகோதர சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு மிகச் சிறப்பாக உரை நிகழ்த்துகிறார்கள். அதுபோல அவர்கள் அதிகம் கலந்து கொள்ளும் நிகழ்வுகளும், அவர்களே ஒருங்கிணைக்கும் நிகழ்வுகளும் நடைபெற வேண்டும். தமிழக ஒற்றுமை மேடை ஏற்பாடு செய்த கருத்தரங்கம் சிறந்த முன்னுதாரணம். இது போன்ற நிகழ்வுகள் தொடர வேண்டும்.

### 4. அறிவுத் தளத்தில் தயாராக வேண்டும்

போராட்டம் ஆர்ப்பாட்டங்களுக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடி விடுகின்றனர். உணர்வுப் பூர்வமான உரைகளும் நிகழ்த்தப்படுகின்றன. உணர்வு மேலெழும்பும் முழக்கங்களும் எழுப்பப் படுகின்றன. ஆனால் வக்ஃப் என்றால் என்ன? வாரியத்தின் பணிகள் என்ன? இத் திருத்தச் சட்டத்தின் அபாயங்கள் என்ன? வக்ஃப் சட்டத்தைத் திருத்தவே கூடாதா? நாடாளுமன்றம் கூடி எடுத்த முடிவை நீதிமன்றம் நீக்கிவிட முயல்வது நியாயமா? என்பதைக் குறித்தும் விளக்க வேண்டும்.

வக்ஃப் சட்டத்தில் 44 திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். ஆனால் எல்லாத் தளங்களிலும் ஐந்தாறு திருத்தங்களைக் குறித்துத்தான் தொடர்ந்து விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த 44 திருத்தங்கள் என்ன? அதிலுள்ள அபாயங்கள் என் னென்ன? என்பதைக் குறித்து அவசியம் அறிய வேண்டும். பொது வெளியில் அது குறித்த விவாதம் எழ வேண்டும். 1995 ஆம் கொண்டுவரப்பட்ட திருத்தத்திலிருந்து இது எவ்வகையில் மாறுபடுகிறது என்பதை ஒப்பாய்வு செய்து விளக்க வேண்டும்.

தனிப்பட்ட சந்திப்புகளின் மூலம் வக்ஃப் குறித்த புரிதலையும், தெளிவையும் அனைவரிடமும் ஏற்படுத்த வேண்டும். இது முஸ்லிம்களின் பிரச்னை மட்டுமல்ல. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் படுபாதகச் செயல் இது. அமைப்புச் சட்டம் 14,25,26,29 ஆகிய பிரிவுகளை அப்பட்டமாக மீறுகிறது. இந்தியா மதச்சார்பற்ற நாடு என்ற நிலையிலிருந்து மாறுவதற்கான அபாயகரமான முன்னெடுப்பு இது, பாரபட்சம் மிக்கது. ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சியைப் பாதிக்கக் கூடியது என்பதை எடுத்துரைக்க வேண்டும்.

துண்டறிக்கைகள், வக்ஃப் குறித்த நூல் களைப் பரவலாக மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். சுருங்கச் சொன்னால் எதற்காகப் போராடுகிறோம் என்பதை போராட்டத்தில் கலந்து கொள்பவர்கள் அறிந்திருக்க வேண்டும். அதற்கேற்ப பரப்புரைகளின் உரைகள், ஜும்ஆ உரைகள் அமைய வேண்டும். உணர்வுப் பூர்வமாக உரத்து முழங்குவதால் மட்டுமே பிரச்னைகளைத் தீர்த்துவிட முடியாது.

## 5. அவதூறுகளை முறியடிக்க வேண்டும்

இந்திய பாதுகாப்பு, ரயில்வேக்குப் பிறகு அதிக சொத்துகள் வக்ஃபில் இருக்கின்றன. வாரியத் தலைவருக்கு வானளாவிய அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. வக்ஃப் சொத்துகளை அபகரிப்பதை மீட்பதற்காகத் தான் இந்தத் திருத்தச் சட்டம். பெண்களுக்கான உரிமையை இதன் மூலம் வழங்குகின்றோம். தீர்ப்பாயங்களின் முடிவை எதிர்த்து நீதி மன்றம் சென்று உரிமையைப் பெற முடியும். வக்ஃப் சொத்துகள் கணக்கீடு செய்வதற்கு இது வழி வகுக்கும். தமிழ்நாட்டிலுள்ள ஒரு கிராமத்தை அபகரித்து விட்டார்கள். அதனால் தான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது என்பன போன்ற பல பொய்களையும், அவதூறு களையும் அள்ளி வீசுகின்றனர்.

இந்த அவதூறுகளுக்கும், பொய்களுக்கும் சான்றுகளுடன் பதிலளிக்க வேண்டும். நியாய மான கேள்விகளின் மூலம் பொதுமக்களின் மனசாட்சியைத் தட்டி எழுப்ப வேண்டும்.

## 6. ஊடகங்களைப் பயன்படுத்த வேண்டும்

நம்மிடம் முழு நேரச் சேனல்கள், தொலைக்காட்சிச் சேனல்கள் இல்லை. ஊடகங்கள் பல விலைபோய் விட்டன. பொய்ச் செய்திகள்தான் முண்டியடித்துக் கொண்டு வருகின்றன. நம்மிடம் இருக்கும் பத்திரிகைகள், சமூக வலைதளங்களைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். கலை, நாடகங்கள் வாயிலாக வக்ஃப் திருத்தச் சட்டத்தின் ஆபத்தை உணர்த்த வேண்டும்.

நாடாளுமன்றத்தில் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிகச் சிறப்பான வாதங்களை முன்வைத்தார்கள். சகோதர சமுதாயச் சொந்தங்கள் பலரும் ஊடக விவாதங்களில் ஆழமான கேள்விகளை எழுப்பினார்கள். பல ஆளுமைகள் கட்டுரைகளை எழுதினார்கள். அனைத்தும் ஆவணப்படுத்தப்பட வேண்டும். பரவலாக்க வேண்டும்.

ஊடகவியலாளர்களைச் சந்தித்து அவர் களுக்குப் போதிய செய்திகளைக் கொடுக்க வேண்டும். பிழையான செய்திகளுக்கு உரிய மறுப்பை வழங்க வேண்டும்.

## 7. தொடர் சந்திப்புகள் அவசியம்

இளைஞர்கள், கல்வியாளர்கள், அதிகாரிகள், ஆசிரியர்கள், பெண்கள், அரசியல் தலைவர்கள், வழக்கறிஞர்கள், வியா பாரிகள் எனப் பல தளங்களிலும் தொடர்ந்து மக்களைச் சந்தித்துப் பேச வேண்டும். முஸ்லிம் களிடம் மட்டுமின்றி சகோதர சமுதாயச்

சொந்தங்களிடமும் தனிப்பட்ட சந்திப்புகளை மேற்கொண்டு வக்ஃப் திருத்தச் சட்டத்தின் கேடுகள், ஒன்றிய அரசின் வெறுப்பு, நாட்டுக்கு ஏற்படும் பொருளாதார இழப்பு, பிரச்னைகள் எனப் பேச வேண்டும். விரிவான உரையாடல் களங்களை ஏற்படுத்த வேண்டும்.

### 8. நம்பிக்கை இழந்து விடக்கூடாது

தொடர்ந்து முஸ்லிம்கள் மீது நடத்தப்படும் இதுபோன்ற உளவியல் தாக்குதல்களால் நாம் நம்பிக்கை இழந்துவிடக் கூடாது. நிராசை அடைந்து விடக்கூடாது. இந்தச் சட்டம் நிரந்தரம் அல்ல. இதுவும் திருத்தத்திற்கு உள்ளாகக் கூடியது.

என்னதான் வெறுப்பை விதைத்தாலும் உண்மையின் பக்கம் நிற்கக் கூடிய மக்கள் இருக்கின்றார்கள். 232 வாக்குகள் வக்ஃப் சட்டத்தை எதிர்த்து பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. வீரியமான விவாதத்தை முன்னெடுப்பவர்கள் இருக்கின்றார்கள். தமிழ்நாடு அரசு முதலமைச்சர் சட்டசபையில் முழக்கமிடுகிறார். கருப்புப் பட்டை அணிந்து வருகிறார். வழக்குத் தொடுக்கிறார். மேற்கு வங்க சட்டமன்றமோ ஒருபடி மேலே போய் இந்த திருத்தச் சட்டத்தை மேற்குவங்கத்தில் நடைமுறைப்படுத்த மாட்டோம் என்கிறது.

கேரளாவில் உள்ள ஸ்ரீ நாராயண தர்மம் மானவ அறக்கட்டளை வக்ஃப் திருத்தச் சட்டத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளது.

நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. முழுமையான தடை வரும் என்று எதிர்பார்ப்போம். எல்லாவற்றுக்கும் மேல் சத்தியம் நிச்சயம் வெல்லும், அசத்தியம் நிச்சயம் தோற்றுப்போகும். சூழ்ச்சியாளர்களின் சூழ்ச்சியை இறைவன் முறியடிப்பான். சோதனையான கால கட்டங்களில் நாம் பயிற்சியும், முயற்சியும் மேற்கொள்ளும்போது நம்மிடமுள்ள ஆற்றல்களைப் பெருக்கிக் கொள்கிறோம். இது ஜனநாயக நாடு. ஜனநாயகத்தின் மூலம் நிச்சயம் நாம் ஒருநாள் வெல்வோம் என்ற நம்பிக்கையுடன் களமாட வேண்டும்.

### 9. ஆக்கிரமிப்பு நிலங்கள் மீட்கப்பட வேண்டும்

வக்ஃப் சொத்துகளை அரசு, கார்ப்பரேட் நிறுவனங்கள் மட்டுமின்றி தனிநபர் பலரும் ஆக்கிரமித்துள்ளனர். இந்தியாவில் சுமார் 58929 வக்ஃப் நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக கிரண் ரிஜிஜு நாடாளுமன்றத்தில் பேசும்போது குறிப்பிட்டார். வக்ஃப் நிலங்களை மீட்க வேண்டும்.

சில முஸ்லிம்களே வக்ஃப் நிலங்களை ஆக்கிரமித்துள்ளனர். தவறாகப் பயன்படுத்துகின்றனர். வெறும் 100 ரூபாய் வாடகைக்கு மிகப் பெரிய சொத்தை அனுபவித்து வருகின்றனர். இந்த நிலை மாற வேண்டும். வக்ஃப் நிலங்களை ஆக்கிரமித்தவர்கள் இறைவனுக்கு அஞ்ச வேண்டும். மாற்றத்தை நம்மிடமிருந்து தொடங்க வேண்டும். நாம் மாறாத வரை இங்கு மாற்றங்கள் சாத்தியமில்லை.

‘..எந்த ஒரு சமூகமும் தன் பண்புகளை மாற்றிக்கொள்ளாத வரை உண்மையில் அல்லாஹ்வும் அச்சமூகத்தின் நிலையை மாற்றுவதில்லை. மேலும், அல்லாஹ் ஒரு சமூகத்திற்குத் தீமையை நாடிவிட்டால் அதனை யாராலும் தடுத்து நிறுத்திட இயலாது. அல்லாஹ்வுக்கு எதிராக அத்தகைய சமூகத்தாருக்கு உதவி செய்வோரும் எவருமிலர்’ (திருக்குர்ஆன் 13:11)

### 10. பாதுகாப்போம், பயன்படுத்துவோம்

தமிழ்நாடு முழுவதும் வக்ஃப் வாரியத்திற்குச் சொந்தமான காலியாக, பயன்படுத்தாமல் உள்ள இடங்களில் சமுதாய மக்கள் பயன்பெறும் வண்ணம் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், மதரஸாக்கள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் போன்ற வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு வக்ஃப் வாரியம் அனைத்து அனுமதிகளையும் சட்ட விதிகளுக்கு உட்பட்டு வழங்கத் தயாராக உள்ளது என்று வக்ஃப் நிறுவனங்களின் கீழ் இயங்கும் முத்தவல்லிகளுக்கு தமிழ்நாடு வக்ஃப் வாரியத் தலைவர் நவாஸ் கனி கடிதம் எழுதியுள்ளார்.

இது மிகத் தாமதமான, அதே நேரத்தில் வரவேற்கத்தக்க முடிவு. வக்ஃப் நிலத்தை முறையாகப் பயன்படுத்தினாலே முஸ்லிம் சமுதாயத்தின் பெரும்பாலான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். வக்ஃப் செய்தவர்கள் எந்த நோக்கத்திற்காக வக்ஃப் செய்தார்களோ அந்த நோக்கமும் அதன் மூலம் நிறைவேறும்.

அதுபோல இருக்கின்ற வக்ஃப் நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். நீண்ட நாள்களாகப் பயன்பாட்டில் உள்ள வக்ஃப் நிலங்கள் முன்பு வாய்மொழி மூலம் வக்ஃப் செய்யப்பட்டவை. அதற்கான முறையான ஆவணங்கள் இல்லை. நன்கு அறியப்பட்ட செயல்பாட்டில் உள்ள வக்ஃப் நிலங்களுக்கு பட்டா உள்ளிட்ட உரிய ஆவணங்களைப் பெறும் வகையில் முழு முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 11. அழைப்பியலுக்கான அழகிய வாய்ப்பு

இஸ்லாம் குறித்தும், முஸ்லிம்களைக் குறித்தும் மிகப் பிழையாகச் சித்திரிக்கப் பட்டு வரும் சூழலில் அந்தப் பிழையான கருத்துருவாக்கத்தை உடைத்து நொறுக்கு வதற்கான அழகிய வாய்ப்பாக இச்சூழலைப் பயன்படுத்தவேண்டும்.

இஸ்லாம் ஒரு முழுமையான வாழ்க்கைத் திட்டம். வெறும் சடங்குகள், வழிபாடுகளுடன் நின்றுவிடுகின்ற மதம் அல்ல. இஸ்லாம் வாழ்வியலைச் சொல்லும் மார்க்கம். வறுமையை ஒழிப்பதற்கான ஜகாத்தை வழி பாடாகக் கொண்ட மார்க்கம் இஸ்லாம். வறுமையை ஒழித்து பொருளாதார நீதியை வேண்டி நிற்கும் பல திட்டங்களை இஸ்லாம் முன்வைக்கின்றது. தான தர்மங்கள் செய்தல், ஜகாத் எனும் கட்டாயக் கொடை, வட்டியில்லா நிதி உதவி, பைத்துல் மால்கள், உழைத்துப் பிழைப்பதை ஊக்குவித்தல் ஆகியவற்றில் மிக முக்கியமானது ஸதக்கத்துல் ஜாரிய்யா எனும் நிலையான நல்லறம்.

முஸ்லிம்கள் தங்களின் சொந்தப் பணத்தை இறைபாதையில் அர்ப்பணிக்கும் அழகிய திட் டத்தை இஸ்லாம் ஊக்குவிக்கிறது. இந்த நிலை யான நல்லறப் பணிகளில் ஒன்றுதான் வக்ஃப் செய்தல். இறைவனின் திருப்தியை நாடி இறை வனுக்காகத் தம் சொத்தைத் தானமாக வழங்கும் உயரிய பண்பின் காரணமாகத்தான் இஸ்லா மிய செல்வந்தர்கள் தங்களின் பெரும் பெரும் சொத்துகளைத் தானமாக வழங்கினார்கள்.

இந்த வக்ஃபிலிருந்து முஸ்லிம்கள் மட்டுமல்ல, அனைத்து சமுதாய மக்களும் பயன்பெற்று வருகின்றனர். இந்த அடிப் படையில் வக்ஃபின் நோக்கம், இஸ்லாம் உருவாக்க விரும்பும் சமுதாயம் போன்ற செய்திகளையும் நாம் இந்த நேரத்தில் மிக அழகிய முறையில் உரையாட வேண்டும்.

### 12. இறைவனையே சார்ந்திருப்போம்

மகிழ்வான சூழலானாலும், துன்பமான சூழலானாலும், சோதனையான காலகட்டங் களில் மட்டுமின்றி எல்லாச் சூழலிலும் நாம் இறைவனையே சார்ந்திருக்க வேண்டும். இந்தச் சோதனைகளை நாம் இறை உதவி கொண்டு தான் வெல்ல முடியும். எனவே நாம் நம் தவறுகளைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும். நமது பிழைகளுக்காகப் பாவமன்னிப்புக் கோர வேண்டும். இறைவனிடம் முழு நம்பிக்கை வைத்து பிரார்த்தனை செய்ய வேண்டும்.

ஆனால் முயற்சி எதுவும் செய்யாமல் பிரார்த்தனைகளின் மூலம் வென்றிட முடியாது. முழுமையான முயற்சி செய்ய வேண்டும். இறைவனையே சார்ந்திருக்க வேண்டும். இந்தச் சோதனையும் நமக்கு நன்மையை ஈட்டித்தரும் வாய்ப்பும், சூழலும் உள்ளது.

நேற்று பாபர் மஸ்ஜித், குடியுரிமைத் திருத்தச் சட்டம் போன்ற தாக்குதல்கள். இன்று வக்ஃப் பிரச்னை. நாளை பொது சிவில் சட்டம் போன்று வேறு எதுவும் வரலாம். எல்லாச் சூழலிலும் நாம் நிராசையோ, சோர்வோ அடையாமல் தொடர்ந்து போராட வேண்டும். சத்தியம் சோதனைக்கு உள்ளாக்கப்படும். ஆனால் ஒருகாலமும் தோற்றுப் போவதில்லை.

சத்தியம் வெல்லும். அசத்தியம் அழியும். அசத்தியம் அழிந்தே தீரும் என்பது இறை நியதி. கடந்த கால வரலாறும் அதையே நமக்கு உரத்துச் சொல்கிறது.

بسم الله الرحمن الرحيم

# உஸ்வத்துன் ஹஸனா மாமாஞ்சி ஹாஜி அப்துல் லத்தீப் மகளிர் கல்லூரி

சுயநிதி

(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது)

தமிழக அரசு அங்கீகார எண் G.O. MS.No. 64590 / R2 / 2010 Dt 03.04.2012

பள்ளபட்டி – 639 205 கரூர் மாவட்டம்

போன் : 9443926460, 9150522701, 04320 – 241282

E.mail : uswathuhasanaclg@gmail.com நிர்வாகம் : பள்ளபட்டி முஸ்லிம் கல்விச் சங்கம்

## இளநிலைப் பட்டப்படிப்புகள்

**B.A. (English)** **B.Com (CA)** **B.Sc (CS)**

## கல்லூரியின் சிறப்பம்சங்கள்

- நவீன வசதிகளுடன், காற்றோட்டத்துடன் கூடிய விசாலமான வகுப்பறைகள்
- திறமை மிக்க பேராசிரியைகள் மூலம் தரமான கல்வி
- இன்டர்நெட் வசதியுடன் கூடிய கணினி ஆய்வகம்
- அரபி, ஆங்கிலம், தமிழ் நூல்கள் அடங்கிய நவீன நூலகம்
- அனைத்து மாணவிகளுக்கும் கணினி மற்றும் ஆங்கிலத்தில் பேசுவதற்கான பயிற்சி
- பல்கலைக்கழகத் தேர்வுகளில் 100% தேர்ச்சி
- பல்கலைக்கழகத் தரவரிசைகளில் அதிக இடங்கள் பெற்று சாதனை
- அனைவருக்கும் ஏற்ற கல்விக் கட்டணம்
- உலகக் கல்வியோடு, முழுமையான தீனிய்யாத் பாடத்திட்டத்துடன் கூடிய மார்க்கக் கல்வியும் போதிக்கப்பட்டு கல்லூரிப் படிப்பை முடித்துச் செல்லும் போது மார்க்க அறிஞர் பட்டம் (Islamic Studies)
- தரமான உண்டுறை விடுதி

**விண்ணப்பப்படிவக் கட்டணம்**

**நேரில் ரூ.200/– தபாலில் பெற ரூ.225 /–**

தாளாளர் முதல்வர்

# இஸ்லாமிய வெறுப்புக் குற்றங்கள்

- K. ரியாஸ்

## வெறுப்பை உமிழும் பாஜக MP

மத்தியப்பிரதேச மாநிலம் போபாலில் கடந்த மாதம் நடந்த பொது நிகழ்வில் பேசிய பாஜக MP அலோக் சர்மா, 'லவ் ஜிஹாத் வழக்குகளில் சிக்கியவர்களுக்குக் கருத்தடை செய்யப்படுவதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்' என்றார். பொதுமக்களை ஆக்ரோஷமான நடவடிக்கை எடுக்க வலியுறுத்திய துடன் இதுபோன்ற சம்பவங்கள் எங்கு பதிவானாலும், என்னை நேரடியாக அழையுங்கள். தேவைப்பட்டால், உடனடியாக காவல் நிலையங்களைச் சுற்றி வளையுங்கள்' என்று வெறுப்பை உமிழ்ந்தார்.

## பஹல்காமை முன்வைத்து பரப்பப்படும் வெறுப்பு

மேற்கு வங்கத்தின் கோபால் நகர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட அகய்பூர் ரயில் நிலையம் அருகே உள்ள ஒரு பொதுக் கழிப்பறையின் சுவரில் பாகிஸ்தானின் தேசியக் கொடியை ஒட்டி சமூக பதற்றத்தை ஏற்படுத்தியதன் பின்னணியில் சனாதனி ஏக்தா மன்ச் என்ற இந்துத்துவா அமைப்பைச் சார்ந்த சந்தன் மலகர்(30), புரோக் யாஜித் மொண்டல்(45) ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

விசாரணையின் போது 'இந்துஸ்தான் முர்தாபாத்', 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' போன்ற வெறுப்பு வாசகங்களையும் எழுதத் திட்டமிட்டதாக அவர்கள் தெரிவித்தனர். குற்றம் சாட்டப் பட்டவர்களில் ஒருவர் 'பஹல்காமில் நடந்த கொலை களுக்கு எதிராக நாங்கள் நடத்திய போராட்டம் தான் இது' என நீதிமன்றத்தில் கூறினார்.

## வெறுப்புப் பழி

'சட்டவிரோத பாகிஸ்தானியர்கள், வங்கதேசிகள் குறித்த தரவுகளை தெலுங்கானா முதல்வர் வெளி யிட வேண்டும்' என்று பாஜக நாடாளுமன்ற உறுப்பினர் ரகுநந்தன் ராவ் தெரிவித்தார். தெலுங் கானா மாநிலத்தில் நடந்த பல வகுப்புவாத கலவரச் சம்பவங்களைக் குறிப் பிட்ட அவர், 'கோயில் சேதப்படுத்தப்பட்ட சம் பவம், குரங்குகளால் நடந்தது என போலீசார் நடத்திய சிசிடிவி ஆய்வில் நிரூபிக்கப்பட்டிருந்தாலும் அதை மதரஸா மாண வர்கள் தான் செய்தார்கள்' என்றார்.



## வெறுப்பு முழக்கம்

உத்திரப்பிரதேசத்தில் உள்ள அலிகரில் ஏப்ரல் 28ஆம் தேதி வலதுசாரி இந்துக் குழுக்களால் அறிவிக்கப்பட்ட வேலை நிறுத்தத்தின் போது நடத்தப் பட்ட போராட்டத்தில் பஹல்காம் தாக்குதலைக் குறிப்பிட்டு இஸ்லாமியர்களுக்கு எதிரான வெறுப்பு முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இது அப்பகுதியில் பதற்றத்தையும் அச்சத்தையும் உருவாக்கியது.

## வரம்பு மீறும் வகுப்புவாதிகள்

ஏப்ரல் 30 அன்று உத்தரகாண்டிலுள்ள நைனிடாலில் உள்ள இந்து தேசியவாத அமைப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்கள், ஒரு வயதான முஸ்லிம் நபர் ஒரு சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்ததாகக் குற்றம்

சாட்டப்பபட்டதைத் தொடர்ந்து காவல்துறையினர் குற்றம் சாட்டப்பபட்டவரைக் கைது செய்து மருத்துவப் பரிசோதனை செய்த போதிலும், அந்த நபரை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூறி குற்றம் சாட்டப்பட்ட நபர் வேலை செய்த கடையில் உள்ள முஸ்லிம்களைத் தாக்கினர். மேலும் ஒரு மஸ்ஜித், முஸ்லிம்களின் கடைகளைத் தாக்கினர்.

## மிரட்டல்

ஜம்மு காஷ்மீர் மாணவர் சங்கத்தின் ஒருங்கிணைப் பாளர் நசீர் குவேஹாமி, மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் கொலை மிரட்டல்கள் வருவதாகக் குற்றம் சாட்டி யுள்ளார். பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து, காஷ்மீர் மாணவர்கள், தொழிலதிபர்களை வெறுப்புத் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பதற்கான அவரின் முயற்சியின் காரணமாக இந்த மிரட்டல் வந்திருப்பதாகக் கூறினார்.



## அநாகரிகம்

மகாராஷ்டிராவின் பிம்ப்ரி சின்ச்வாட்டில் உள்ள ஒரு பூங்காவில் இரண்டு முஸ்லிம் பெண்கள் தொழுகை நடத்திய பிறகு, வலது சாரிக் குழுவான இந்து சகால் சமாஜைச் சேர்ந் தவர்கள் பசுவின் சிறு நீரைத் தெளித்து சுத்தி கரிப்பு சடங்கைச் செய்தனர்.

## தாக்கப்படும் காஷ்மீர் மாணவர்கள்

ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த ஒரு மருந்தக மாணவர், ஏப்ரல் 27 அன்று, நாக்பூரின் காம்ப்டி பகுதியில் உள்ளூர்வாசிகளால் தாக்கப்பட்டார்.

தோடா மாவட்டத்தைச் சேர்ந்த அந்த மாணவர், தனது நண்பருக்காகக் காத்திருந்தபோது உள்ளூரில் உள்ள ஒரு குழு அவரிடம் எங்கிருந்து வந்திருக்கிறாய்? ஏன் இங்கு இருக்கிறாய்? எனக் கேட்டு அவர் பதில் அளிக்கத் தயங்கியதும் கடுமையாகத் தாக்கியுள்ளனர். அவரது நண்பர் திரும்பி வந்ததும் அவர்கள் மாண வர்கள் என்று தெளிவுபடுத்தினார், அதன் பிறகு தாக் குதல் நடத்தியவர்கள் அவர்களை விடுவித்தனர்.

## விரட்டப்படும் காஷ்மீர் வியாபாரிகள்

ஏப்ரல் 23 அன்று முசோரி யில் இரண்டு காஷ்மீர் சால்வை விற்பனையாளர்கள் தாக்கப்பட்டு, தங்கள் உடைகளை மூட்டை கட்டி அந்த இடத்தை விட்டு வெளியேறும்படி கட்டாயப்படுத்தப் பட்டனர்.

காஷ்மீரைச் சேர்ந்த மேலும் 16 தொழிலதிபர்கள் அச்சுறுத்தப்பட்டு, வீட்டை விட்டு வெளியேறும் படி மிரட்டப்பட்டதாகக் கூறப் படுகிறது. பல ஆண்டுகளாக இந்தத் தொழிலாளர்கள் அங்கு அமைதி யாகத் தொழில் செய்து வருவதாகக் கூறிய ஒரு தொழிலாளி இது இங்குள்ள உள்ளூர் மக்களுக்கு தெரிந்தும் யாரும் எங்களைப் பாதுகாக்க வரவில்லை எனவும் வருத்தம் தெரிவித்தார். எனவே பாதுகாப்புக்குப் பயந்து அனைத்து விற்பனையாளர்களும் அந்தப் பகுதியை விட்டு வெளியேறினர். வியப்பூட்டும் விதமாக, பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு காஷ்மீரிகள் மீதான தாக்குதல்களைத் தடுக்க முடியவில்லை என்றும் அவர்களை அந்த இடத்தை விட்டு வெளி யேறுமாறு போலீசார் கேட்டுக் கொண்டனர்.

## இஸ்லாமிய வெறுப்புத் தாக் குதல்

ஏப்ரல் 27 அதிகாலையில் மத்தியப் பிரதேசம் மாநிலம் போபாலில் உள்ள ராணி கம்லாபதி ரயில் நிலையத்தில் அரசு ரயில்வே காவல்துறை(GRP) அதிகாரி நாசர் தௌலத் கான் பணியில் இருந்த போது, பார்க்கிங் வளாகத்தில்

மூன்று இளைஞர்கள் மது அருந்துவதைக் கண்டு அவர்களிடம் பொது இடத்தில் மது அருந்துவதை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டார். இதைக் கேட்டு கோபமடைந்த நபர்கள் நாசரின் முஸ்லிம் அடையாளத்தால் அவரை இஸ்லாமிய வெறுப்பு வார்த்தைகளால் திட்டி, தாக்கத் தொடங்கினர்.

நாசரின் சக ஊழியர்களான சந்தீப், கமல் தலையிட முயன்ற போதிலும், நீங்கள் இந்துச் சகோதரர்கள் விலகிச் செல்லுங்கள் என கூறிவிட்டு நாசரைத் தொடர்ந்து ஆக்ரோஷமாகத் தாக்கினர்.

## தாக்கப்பட்ட முஸ்லிம் குடும்பம்

2025 ஏப்ரல் 5 அன்று உத்தராகாண்ட் மாநிலம் டோய்வாலாவில் திருமணத்தில் கலந்து கொள்ளச் சென்றிருந்த ஒரு முஸ்லிம் குடும்பம் கொடூரமாகத் தாக்கப்பட்டது. சுமார் 5,6 பேர் கொண்ட ஆண்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தி, அவர்களின் பெயர்களையும் மதத்தையும் கேட்டு, அவர்கள் முஸ்லிம்கள் என்பதை அறிந்ததும் இரும்புக் கம்பிகள், கத்திகளால் தாக்கினர். தாக்குதலில் அவர்களின் வாகனமும் சேதமடைந்தது. இரத்தக் காயங்களுடன் அவர்கள் சாலையில் நிற்கும் காட்சிகள் பொதுமக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

## சிறுவர்கள் மீது பாயும் வெறுப்பு

பீகார் மாநிலம் பேலாவில் உள்ள ஹசன்பூர் கிராமத்தில், ஏப்ரல் 5 அன்று பள்ளியிலிருந்து வீடு திரும்பும் போது, இந்துச் சிறுவர்கள் குழுவினால் முஸ்லிம் குழந்தைகள் தாக்கப்பட்டனர்.

தாக்குதல் நடத்தியவர்கள், ‘ஜெய் ஸ்ரீ ராம்’ என்று முழங்குமாறு கட்டாயப்படுத்தினர், மறுத்தால் அவர்களின் கழுத்தை அறுத்து மரத்தில் தொங்கவிடுவதாக மிரட்டினர்.






## தாக்கப்பட்ட முஸ்லிம் காவலர்

உத்தரகாண்ட் மாநிலம் நைனிடாலில் உள்ள மல்லிதாலில் சப்இன்ஸ்பெக்டர் ஆசிப் கான், கலவரக்காரர்களால் கொடூரமாகத் தாக்கப்பட்டார். அவரது சீருடை கிழிக்கப்பட்டது, மேலும் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது.

## வெறுப்புத் தாக்குதல்

ஏப்ரல் 29 அன்று, பீகாரில் உள்ள சமஸ்திபூரில் வசிக்கும் காரி முஹம்மது ரியாஸ், ஒடிசாவின் கெந்துஜார் மாவட்டத்தில் உள்ள பார்பில் என்ற நகரத்திலிருந்து திரும்பிச் சென்று கொண்டிருந்தார்.

சம்பல்பூரில் உள்ள பேருந்து நிலையத்திற்கு வந்த பிறகு, மோதிஜரான் பகுதியில் உள்ள மதரஸா பைசான் இ அலிக்குச் செல்லும் ஆட்டோ ரிக்ஷாவில் ஏறினார். அப்போது நான்கு பேர் அவரிடம் எங்கிருந்து வந்துள்ளாய் என வினவி அவரின் ஆதார் அட்டையை காண்பிக்குமாறு கேட்டு அவரை பங்களாதேஷி, பாகிஸ்தானி என இன்னும் பல இஸ்லாமிய வெறுப்பு வார்த்தைகளால் திட்டி மரக்கட்டைகளால் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

## பிரிவினை முழக்கங்கள்

உத்தரப்பிரதேச மாநிலம் மீரட்டில், பஹல்காமில் சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டதற்கு எதிராக இந்து யுவவாஹினி ஏற்பாடு செய்த போராட்டத்தில், பங்கேற்பாளர்கள் முஸ்லிம்களைக் குறிவைத்து, ‘இந்த நாடு முல்லாக்கள், காஜிகளுக்கு அல்ல, வீர சிவாஜிக்குச் சொந்தமானது. எங்கள் மதத்தைச் சொன்ன பிறகு அவர்களைக் கொல்வோம்’ என்று மிரட்டினர்.

## பகல் படுகொலை

கர்நாடகாவின் மங்களூரு நகரத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புறநகர் பகுதியான





குடுபுவில், கேரளாவைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் நபர் 25க்கும் மேற்பட்டோர் கொண்ட ஒரு கும்பலால் அடித்துக் கொல்லப்பட்டார். உள்ளூர்வாசிகள் 'இந்து மைதானம்' அல்லது 'சாம் ராட் மைதானம்' என்று அழைக்கப்படும் கிரிக்கெட் மைதானத்திற்கு அருகில் உள்ள பத்ரா கல்லூர்டி கோயிலுக்கு அருகில் அவர் அடித்துக் கொல்லப்பட்டதாகக் காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

'இது பிற்பகல் 3 மணியளவில் நடந்தது. அவர் தடிகளால் தாக்கப்பட்டார், குத்தப்பட்டார், உதைக்கப்பட்டார். அவர் நிறுத்துமாறு கெஞ்சிக் கொண்டே இருந்தார்' என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர் செய்தியாளர்களிடம் கூறினார். 'சிலர் தலையிட முயன்றனர். ஆனால் தாக்குதல் நடத்தியவர்கள் அவர் சரிந்து விழும் வரை நிறுத்தவில்லை' என்றார்.

## வெறுப்பைக் கக்கும் ஊடகங்கள்

அண்மைக்காலச் செய்தி அறிக்கைகளில் 'லவ் ஜிஹாத்' என்ற வார்த்தையை ஒரு குற்றத்துடன் இணைத்து ஒட்டுமொத்த சமூகத்தையும் அவதூறு செய்ததற்காக இரண்டு முக்கிய இந்தி செய்தித் தாள்களான தைனிக் பாஸ்கர், நவ் துனியா மீது சட்டப்பூர்வ புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது. சமூக நல்லிணக்கத்தை சேதப்படுத்தியதற்காகவும், தவறான தகவல்களைப் பரப்பியதற்காகவும் ஊடகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனுதாரர் மஃரூப் அஹமது கான் கோரியுள்ளார். ச


HIJAZ
LEATHERS PVT. LTD.,
Tanners & Exporters of
Finished Leathers & Fashion Gloves

HEAD OFFICE :
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

TANNERY :
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

GLOVE FACTORY :
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com



# தொப்பி தாடி

- வி.எஸ்.முஹம்மத் அமீன்

தொப்பியும் தாடியும்
விபத்தை ஏற்படுத்தவல்ல
அடையாளங்களல்ல
விபத்திலிருந்து காப்பவர்களாய்த்தான்
அந்த அடையாளக்காரர்களின்
வரலாறு இருந்திருக்கிறது

சுனாமி பேரழிவிலும்
சென்னைப் பெருவெள்ளத்திலும்
கொரோனா பெருந்தொற்றிலும்
தொப்பிக்காரர்களும்
தாடிக்காரர்களும்
களம் நின்றார்கள்
பசி தீர்த்தார்கள்
உயிர் மீட்டார்கள்

பயங்கரவாதிகள்
தீவிரவாதிகளின் முகங்களாக
ஊடகச் சித்திரிப்புகள் விரிந்தாலும்
இஸ்லாத்திற்கு எதிரான தீவிரவாதிகள்
தொப்பி தாடி வைத்திருந்தாலும்
பொதுவாழ்வின் தொப்பி தாடிகள்
அவ்வாறு ஒருபோதும் இருந்ததில்லை

பெரும்பாலான தொப்பி தாடிகள்
தீவிரவாதிகளிடமிருந்து
சுற்றுலாப் பயணிகளைக் காக்கும்
பெரும் போராட்டத்தில்
உயிர்த் தியாகம் செய்த
சையத் ஆதில் ஷாக்களுடையவை

உயிர்காக்க ஓடிய
ஓட்டுநர்கள்
முஸாஃபிரும், சமீரும்
அப்துல் வாஹித் கானும்
காயம்பட்டவர்களைத்
தோள்களில் சுமந்த
சால்வை வியாபாரி சஜ்ஜாதும்
தொப்பி அணிபவர்கள் தாம்

பேரன்பைப் பொழிந்தாலும்
உயிர் காக்க நின்றாலும்
பெரும்பழி சுமந்து
போலி வழக்குகளில்
வேட்டையாடப்பட்டுக்
கொண்டே இருக்கும்
தொப்பியும் தாடியும்

அத்தனை பழிச் சொல்லுக்கிடையேயும்
இன்னும் ஒரு பெருமழைக்காலத்திற்கும்
பேரிடருக்கும்
பிரதிபலன் பாராது
ஓடிக்கொண்டே இருக்கும்
தொப்பியும் தாடியும்

ஆடைகளால் அடையாளம்
காணுங்கள் என்றார்கள்
அடையாளம் காண வேண்டியது
வெறுப்புக் களங்களில் அல்ல
அன்பின் களங்களில்

aara
**Thyroid & Endocrine Clinic**

One Care Centre for All Thyroid & Breast Disease

- Thyroid and Endocrine Surgery
- Parathyroid and Adrenal Surgery
- Parathyroid Cancer
- Thyroid Cancer
- Breast Cancer
- Hypothyroidism
- Hyperthyroidism

For Appointment
+91 98410 76177 / +91 90940 26174


First Floor
No.251, Hamid Building
Annasalai, Chennai - 600 006

aara
Clinical Laboratories
Advanced Authenticated Report & Assays

NABL Accredited Medical Laboratory

Our Services

- Full Body Checkup Packages
- All Type of Blood Test Available
- All Medical Test Available





For Appointment & Enquiry
+91 90940 26174 | +91 98417 46177

Home Collection Available

www.aaraclinicallab.in

No.251, Hamid Building, 3rd Floor, Annasalai, Chennai - 600 006.

# இங்கிலாந்தின் பள்ளிக் கல்வித்துறைத் தலைவராகும் மார்க்க அறிஞர்



முஃப்தி ஹாமித் பட்டேல்

இங்கிலாந்து நாட்டின் பள்ளிக் கல்வித்துறைத் தலைமைப் பொறுப்புக்கு முதல் முறையாக சர் முஃப்தி ஹாமித் பட்டேல் என்ற இஸ்லாமிய மார்க்க அறிஞர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஹாமித் பட்டேலின் மூதாதையர் குஜராத் மாநிலம் பரூச்சைச் சேர்ந்தவர்கள். தொழில் நிமித்தமாக 1970இல் இங்கிலாந்தில் குடியேறிய வர்கள். தனது 16ஆவது வயதில் பள்ளிப்படிப்பை முடித்த பின்னர் மார்க்கக் கல்வி தேர்ச்சி பெற்று முஃப்தி ஹாமித் பட்டேல் இஸ்லாமிய மார்க்க அறிஞராகச் செயலாற்றி வருபவர்.

இங்கிலாந்தில் ஐந்து கல்வி நிறுவனங்களை நடத்தி வந்த 'தவ்ஹீதுல் கல்வி அறக்கட்டளை' இயக்குநராக 2019இல் பொறுப்பேற்ற ஹாமித் பட்டேல் அடுத்த ஐந்து ஆண்டுகளில் இங்கிலாந்து முழுவதும் தவ்ஹீதுல் அறக் கட்டளையின் கீழ் இயங்கும் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையை 34 ஆக உயர்த்தியதோடு ஆரம்பக் கல்வி முதல் கல்லூரிக் கல்வி வரை இஸ்லாமியப் பாடத் திட்டத்தை வடிவமைத்தவர்.

இங்கிலாந்து நாட்டின் பொதுக்கல்வி அமைப்புக்களிலும் பல்வேறு முக்கியப் பொறுப்புகள் வகித்து வரும் ஹாமித் பட்டேல் பர்மிங்காம் பல்கலையில் கௌரவப் பேராசிரி யராகவும் பணியாற்றி வருகிறார். இங்கிலாந்து நாட்டின் கல்வி வாரியமான Office For Standards in Education தலைமைப் பொறுப்புக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்விப்புலம் சார்ந்த இவரது பங்களிப்புக்காக 2015இல் சர் பட்டமும், 2021இல் இங்கிலாந்து ராணி விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

– குளச்சல் ஆசிம்

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

ST COURIER®
The People's Choice

ISO 9001 : 2015

# WE NOW ACCEPT
# TO PAY & COD
# BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




An Affiliate Of
WCA
INTER GLOBAL

044-61266666

www.stcourier.com | helpdesk@stcourier.com | Follow Us On -

REGN NO : TN / CCN / 428 / 2024-2026 RNI NO : 33723/81
LICENCED TO POST WITHOUT PREPAYMENT NO. TN/PMG(CCR)/WPP 450/24-26
Publication 1st & 16th of Every Month

SAMARASAM 16 - 31 MAY 2025
POSTED AT EGMORE RMS / 1 PATRIKA CHANNEL
Posted Between 16 - 18 MAY 2025

**100 வருடங்கள்...**
**பாரம்பரிய நம்பிக்கை**
**1925 முதல் !**

**ஒருவர் தம் செல்வத்திலிருந்து**
**எதை அறவழியில்**
**செலவிட்டாரோ,**
**அதுதான்**
**அவருக்குரிய நன்மை பயக்கும்**
**செல்வமாகும்.**

கதீட்ரல் ரோடு
**L.K.S.**
கோல்டு பேரடைஸ்

35. கதீட்ரல் ரோடு, சென்னை - 600 086.
போன் : (044) 2811 3611


If undelivered, please return to : **Samarasam, 138, Perambur High Road, Chennai - 600 012.**